# ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி

## பங்கஜம் நகர்: போடிநாயக்கனூர்

# நாற்பத்தி ஒன்பதாம் ஆண்டறிக்கை

ஏலம் மணக்கும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் பாதம் தொட்டு ஏலம் மணக்கும் போடி மாநகரத்தில் அமைந்திருக்கும் எமது ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியின் **நாற்பத்தி ஒன்பதாம்** ஆண்டு விழாவினை உங்களது நல்லாசியுடனும் இறைவனுடைய அருளாசியுடனும் மிகச் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

ஏல விவசாயிகள் சங்கத்தின் தலைவரும் உண்மை, உழைப்பு, உயர்வு என்று சிகரம் தொட்ட எங்கள் கல்லூரியின் தலைவரும் இவ்வினிய விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கும் **உயர்திரு.S.V.சுப்பிரமணியன்** அவர்களே! கல்லூரியின் வளர்ச்சிக்கு உற்ற தோழனாக இருக்கும் உபதலைவர் **உயர்திரு.S.இராமநாதன், M.A.,** அவர்களே! எண்ணியதை எண்ணியது போன்று செயல்படும் கல்லூரியின் செயலர் **உயர்திரு.R.புருஷோத்தமன், M.A.,B.Ed.,** அவர்களே!

இமயம் போல் வளரும் நம் கல்லூரிக்குத் தூண்களாக விளங்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களே மரியாதைக்குரிய பொதுக்குழு உறுப்பினர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஏல விவசாயிகள் சங்க நிர்வாகிகளே

இன்றைய சிறப்பு விருந்தினர்,

**மதுரை காமராசர் பல்கலைக்கழக புல முதல்வர்**

**(கல்லூரி வளர்ச்சிக்குழு)**

**முனைவர். P.கண்ணதாசன், Ph.D., அவர்களே**

பெற்றோர்களே விருந்தினர்களே பேராசிரியப் பெருமக்களே அலுவலக நண்பர்களே நமது கல்லூரியின் அருமை செல்வங்களாம் முன்னாள் இந்நாள் மாணவ, மாணவிகளே நமது கல்லூரியின் **நாற்பத்தி ஒன்பதாம் ஆண்டு** விழாவைச் சிறப்பிக்க வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவரையும் இருகரம்

கூப்பி வரவேற்று **2022 - 2023** கல்வியாண்டிற்குரிய ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கும் இத்தருணத்தில் முதற்கண் நமது கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகளைப் பட்டியலிடுகிறேன்.

**கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகள்:**

**1. கல்லூரி வளர்ச்சி பணிகள் :**

நமது கல்லூரியில் உள்ள R.பாலு அழகணன் நினைவு கட்டிடம் புதுப்பித்து மிகச் சிறப்பான முறையில் சுமார் ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தைந்து இலட்சம்) மதிப்பில் வேலைகள் நிறைவடைந்துள்ளது.

கல்லூரி ஆண்கள் விடுதி மராமத்து பணிகள் மற்றும் புதிய சிறுநீர் கழிப்பகம் ரூ.9,00,000/- செலவில் நடைபெற்று உள்ளது.

நமது கல்லூரி அலுவலகப் பயன்பாட்டிற்காக ரூ.1,60,000/- மதிப்பில் புதிய ஜெராக்ஸ் மிஷின் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நமது கல்லூரி கணிப்பொறி அறிவியல் துறை முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறையாக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நமது கல்லூரியில் Solar Energy நிறுவுவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நமது கல்லூரியில் அனைத்து துறைகளுக்கும் புதிதாக R.O Water பொருத்தப்பட்டுள்ளது.

நமது கல்லூரியில் wifi வசதியுடன், கணினிகள் அனைத்து துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 12 நவீன வகுப்பறைகள் (Smart classroom) wifi, LCD Projector, Smart screen with computer அமைக்கப்பட்டுள்ளன.

வணிகவியல் துறையைச் சார்ந்த முதுகலை முதலாம் ஆண்டு பயிலும் செ.சுரேந்திரபாண்டியன் என்ற மாணவன் தேசிய அளவில் கோவா-வில் நவம்பர் மாதம் நடைபெற்ற வேல்கம்பு போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு வென்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

சர்வதேச அளவில் நேபாளத்தில் டிசம்பர் மாதம் நடைபெற்ற வேல்கம்பு போட்டியில் கலந்துக்கொண்டு முதல் பரிசு வென்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

அக்டோபர் மாதம் தேனியில் நடைபெற்ற "Cholan Book of World Record" என்ற நிகழ்ச்சியில் தொடர்ச்சியாக 5 மணிநேரம் சிலம்பம் சுற்றி உலக சாதனை படைத்துள்ளார்.

தமிழ்நாடு மாநில அளவில் நடைபெற்ற "Silambam Open Championship" -ல் கலந்துகொண்டு ஒற்றைக்கம்பு வேல்கம்பு சுருள்வால் போன்ற தனித்திறன் சார்ந்த போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளார். மேலும் சிலம்பத்தில் பச்சை பட்டை (Green Double Line Belt) – பெற்றுள்ளார்.

தேனியில் நடைபெற்ற தமிழ்நாடு முதலவர் கோப்பைக்கான போட்டியில் கலந்துகொண்டு மாவட்ட அளவில் மூன்றாம் பரிசு பெற்றுள்ளார்.

வணிகவியல் துறையை சார்ந்த முதலாம் ஆண்டு மாணவி A.பவித்ரா பல்வேறு பேச்சுப்போட்டிகளில் மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலந்துகொண்டு ரொக்கப் பரிசு, முதல் பரிசு போன்ற பல்வேறு பரிசுகளை பெற்றுள்ளார்.

25.01.2023 அன்று தேனி மாவட்டத்தில் நடந்த தேர்தல் கல்வியறிவு குழுவின் மூலம் கல்லூரி அளவில் நடந்த சுவரொட்டிப் போட்டியில் மூன்றாம் ஆண்டு பி.ஏ.ஆங்கில மாணவி தனுஷியா என்பவர் மாவட்ட அளவில் மூன்றாம் பரிசும் சான்றிதழும் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பெற்றார்.

நுண்கலை மன்ற மாணவ, மாணவியர்கள் 13.10.2022 அன்று தேனி நேரு யுவகேந்திரா சார்பாக நடத்தப்பட்ட தேனி மாவட்ட அளவிலான 6 விதமான கலை இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் வெற்றி பெற்று பரிசுத் தொகையுடன் மாநில அளவிற்கான போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

தேனி JCI Honey Bee சார்பாக 19.10.2022 அன்று நடைபெற்ற கலை இலக்கிய போட்டிகளில் நுண்கலை மன்ற மாணவர்கள் கலந்து கொண்டு நான்கு போட்டிகளில் பரிசுகளை வென்றனர்.

22.02.2023 அன்று மதுரை மங்கையர்கரசி பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் நுண்கலை மன்ற மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டு போட்டிகளில் பரிசுகளை வென்றது.

நுண்கலை மன்ற மாணவர்கள் ஆண்டிப்பட்டி பாரத் நிக்கேத்தன் பொறியியல் கல்லூரியில் 17.03.2023 அன்று நடைபெற்ற BNEC FEST-2023 என்ற கலை இலக்கிய போட்டிகளில் கலந்து கொண்டு தொடர்ச்சியாக நான்காவது முறையும் சுழற்கோப்பையை வென்றது

04.11.2022 அன்று திரவியம் கல்லூரியில் நடைபெற்ற Inter collegiate Competion-ல் ஆங்கிலத்துறை மாணவர்கள் கலந்து கொண்டு Runner – Trophy பெற்றனர்.

Broadridge Pvt Ltd, Bangalore-யில் பணிபுரியும் நமது கல்லூரி முன்னாள் மாணவர் திரு.C.சத்யசுந்தரம் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி 15 மடிக்கணினிகளை நமது கல்லூரி நூலகத்திற்கு Next Geneation College Library திட்டத்திற்காக வழங்கி உள்ளார்.

நமது கல்லூரிக்கு அருகில் இருந்த 30 வருட பழமையானஆப்பிரிக்காவை தாயகமாக கொண்ட "யானை பிடுக்கு" என்ற மரம் வேருடன் பெயர்த்து எடுக்கப்பட்டு கல்லூரி வளாகத்திற்குள் இடமாற்றம் செய்யப்பட்டது.

20.10.2022, 20.02.2023, 29.02.2023 அன்று நமது கல்லூரி வேலை வாய்ப்பு வழிகாட்டி மற்றும் பயிற்சி மையம், டி.வி.எஸ்.ட்ரைனிங் அண்ட் சர்வீசஸ், இணைந்து ICICI வங்கிக்காக நமது கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம் நடத்தியதில் 5 பேர் நமது கல்லூரியில் படித்த பட்டதாரி மாணவர்கள், 43 பேர் தற்பொழுது மூன்றாமாண்டு பயிலும் மாணவர்கள் 12 பேர் பிற கல்லூரிகளில் படித்த பட்டதாரிகள் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

நமது கல்லூரி வேலை வாய்ப்பு வழிகாட்டி பயிற்சி மையம் மற்றும் ஐ.ஏ.எஸ்.அகாடமி, மாஸ்டர் கிளாஸ் ட்ரெயினர்ஸ் சென்னை, அகம் அகாடமி, தேனி மற்றும் ரூபிகான் ட்ரெய்னிங் பூனே நிறுவனங்களுடன் இணைந்து "புரிந்துணர்வு ஒப்பந்தம்" (MOU) செய்துள்ளது.

## 2. Research Guidance and Research Publication:

**மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு வழிகாட்டிகள்**

| Department | Name | Ph.D Pursuing | Ph.D submited | Ph.D awarded |
|---|---|---|---|---|
| Mathematics | Dr.K.Krishnan | - | 2 | 4 |
| | Dr.A.R.Manikandan | 4 | - | - |
| Commerce | Dr.S.Balamurugan | 4 | - | - |
| | Dr.A.Sujatha | 2 | - | 2 |
| | Dr.T.Ramalakshmi | 4 | - | 1 |
| Computer Science | Dr.S.Sivakumar | 6 | - | 2 |
| | Dr.R.Murugesan | 6 | - | - |
| Chemistry | Dr.G.Ravindran | 4 | - | - |
| Botany | Dr.C.Gopi | - | 1 | - |
| English | Dr.C.Palanivelrajan | 4 | - | - |
| | Dr.B.Anandprasad | 4 | - | - |
| | Dr.V.Vimala | 2 | 2 | 2 |
| Economics | Dr.Senthilkumar | 2 | - | 1 |

2010-ம் கல்வியாண்டு முதல் பேராசிரியர்களின், ஆராய்ச்சி வழி காட்டுதலுக்கும் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் பிரசுரித்தமைக்கும் நமது கல்லூரி நிர்வாகம் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தலா ரூபாய் 1000/- ரொக்கப் பரிசு அளித்து கௌரவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் இந்த ஆண்டு நடைபெற்ற தேசிய மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

## 3. வேலைவாய்ப்பு வழிகாட்டி மற்றும் ஆலோசனை மையம் & CPAC IAS Academy (Career Guidance, Placement Cell)

25.10.2022 அன்று நமது கல்லூரியைச் சார்ந்த கணினி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை சார்ந்த இறுதியாண்டு மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு சம்பந்தபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

04.01.2023 அன்று நமது கல்லூரியைச் சார்ந்த இறுதி ஆண்டு பயிலும் கணினி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை சார்ந்த மாணவர்களுக்கு Zoho corp-யில் இருக்கும் வேலை வாய்ப்புகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

20.02.2023 அன்று டி.வி.எஸ்.ட்ரைனிங் அண்ட் சர்வீசஸ், சென்னை ICICI வங்கிக்காக பட்டதாரி மாணவர்களுக்காக வேலை வாய்ப்பு முகாம் நடத்தியது. இம்முகாமில் 23 மாணவர்கள் கலந்து கொண்டனர். அதில் ஐந்து பட்டதாரி மாணவர்கள் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் நான்கு மாணவர்கள் நமது கல்லூரியைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

27.03.2023 போடி குறிஞ்சி டெக்னாலஜிஸ் நிறுவனத்தினரால் நமது கல்லூரியை சேர்ந்த கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை சார்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன் பயிற்சி மற்றும் வளாக தேர்வுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

29.02.2023 அன்று டி.வி.எஸ்.ட்ரைனிங் அண்ட் சர்வீசஸ், சென்னை ICICI வங்கிக்காக நமது கல்லூரியில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்காக நமது கல்லூரி வளாகத்தில் வேலை வாய்ப்பு முகாம் நடத்தியது. அதில் கலந்து கொண்ட நமது கல்லூரி மாணவர்கள் 65 பேரில் 43 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மார்ச், 29,30,31 ஆகிய மூன்று நாட்கள் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கான மாற்றுப் பயிற்சிகள் என்ற பொருண்மையில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இதில் தேனியைத் தலைமை இடமாகக் கொண்ட அகம் அகாடமி சார்பாக இப்பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் சுமார் 300க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்.

18.04.2023 முதல் 21.04.2023 வரை நான்கு நாட்கள் கல்லூரியில் Barclays CSR ரூபிகா ட்ரெய்னிங், பூனே நிறுவனத்தினரால் நமது கல்லூரி மாணவர்களுக்கு வாழ்க்கை திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது. இதில் சுமார் 292 மாணவர்கள் பதிவு செய்தனர். வரும் காலங்களில் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பூனேவை சேர்ந்த ரூபிகான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட உள்ளது.

20.04.2023, 21.04.2023 ஆகிய இரண்டு நாட்கள் மாஸ்டர் கிளாஸ் ட்ரெயினர்ஸ், சென்னை நடத்திய மென்திறன் பயிற்சி வகுப்பு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு நடைபெற்றது. இதில் சுமார் 300 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரி வேலை வாய்ப்பு வழிகாட்டி மற்றும் பயிற்சி ஐ.ஏ.எஸ்.அகாடமி, மாஸ்டர் கிளாஸ் ட்ரெயினர்ஸ் சென்னை உடன் இணைந்து "புரிந்துணர்வு ஒப்பந்தம்"செய்துள்ளது. இதன் மூலம் நம் கல்லூரி மாணவர்களுக்கு இனி வரும் காலங்களில் வேலை வாய்ப்பு பயிற்சிகளை வழங்கிட அந்நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீன் மாதம் TCS நிறுவனத்துடன் 15 நாட்கள் பதிவு செய்த மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. அதன் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்பட உள்ளது.

## 4. உள்தர மதிப்பீட்டு நிர்ணய மையம் (Internal Quality Assurance Cell-IQAC)

உள்தரமதிப்பீட்டுமையம் கல்லூரி முதல்வரைத் தலைவராகக் கொண்டு 2007-இல் தோற்றுவிக்கப்பட்டது. IQAC ன் Co-ordinator ஆக Dr.R.முருகேசன் அவர்கள் செயல்பட்டு வருகிறார். மேலும் NAACன் Co-ordinator ஆக Dr.K.கிருஷ்ணன்அவர்கள் செயல்பட்டு வருகிறார். இம்மையம் கல்லூரியின் ஒவ்வொரு துறையும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கோடு தேசியதரமதிப்பீட்டுக் குழு (NAAC) பரிந்துரையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இம்மையத்தின் பிரதானபணியானது கல்லூரியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு தேவையான உணர்வுள்ள, நிலையான மற்றும் வினைத்திறனுள்ள அமைப்பை உருவாக்குவதாகும்.

முதலாமாண்டு மாணவர்களுக்காக உள்தரமதிப்பீட்டுமையம் சார்பில் 04.08.2022 அன்று"**Orientation and Awareness Programme on Code of conduct**"என்னும் விழிப்புணர்வு நிகழ்ச்சி முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது.

மேலும் உள்தரமதிப்பீட்டுமையம் சார்பில் 05.08.2022 அன்று"**Awareness Programme on Drug Abuse for First year students**"என்னும் விழிப்புணர்வு நிகழ்ச்சி முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது.

இக்கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவர்களுக்காக “**Student Induction Programme”**16.08.2022 அன்று முதல் 18.02.2022 வரை 3 நாட்கள் நடத்தப்பட்டது. Dr.K.Siva, Dr.S.Senthilkumar மற்றும் Dr.V.Arunkumar அவர்கள் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டனர்.

உள்தரமதிப்பீட்டுமையம் சார்பில் 26.08.2022 அன்று**“Awareness on Heartfulness”** என்னும் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி சிறப்பாக நடைபெற்றது.

மேலும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்த, உள்தரமதிப்பீட்டுமையம் சார்பில் 05.09.2022 அன்று**“Professional Ethics”**என்னும் கருத்தரங்கு நடந்தேறியது.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிவுசார் சொத்துரிமை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த ,உள்தரமதிப்பீட்டுமையம், Government of India, Ministry of Commerce & Industry, Department for Promotion of Industry & Internal Trade மற்றும்Office of the Controller General of Patents, Designs & Trade Marks இணைந்து 10.11.2022 அன்று**“Intellectual Property Rights (IPR) Awareness Program”** என்னும் இணையவழி கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் தரத்தை ஒருபடி மேலே கொண்டு செல்ல இக்கல்வியாண்டில் **National Institutional Ranking Framework (NIRF) 2023**அறிக்கையை 11.01.2023 அன்று அரசு போர்டலில் (Portal) பதிவேற்றம் செய்யப்பட்டது.

உள்தரமதிப்பிட்டு மையம் மேற்பார்வையில், 22 துறைகள் மற்றும் 43 இதர மையங்களின் தகவல்களை சரிபார்த்து, 2020-2021ஆண்டிற்கான **Annual Quality Assurance Report (AQAR)**அறிக்கையைத் தயாரித்து அவ்வறிக்கையை தேசியதரமதிப்பீட்டுக் குழுவிற்கு**(NAAC)**12.01.2023 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஆண்டுதோறும் உள்தரமதிப்பீட்டுமையம் மூலமாக **All India Survey on Higher Education(AISHE)** அறிக்கை, (asihe.gov.in) என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. 2021-2022 ஆண்டிற்கான All India Survey on Higher Education(AISHE)அறிக்கை 15.02.2023 அன்று அரசு போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**Tamil Nadu State Council for Science and Technology**, Patent Information Centre, Government of Tamil Nadu, Chennai, மற்றும்**Technology Information Forecasting and Assessment Council**, Department of Science and Technology, Government of India மற்றும் **CPA** கல்லூரி,

உள்தரமதிப்பீட்டுமையம் இணைந்து 22.02.2023 அன்று **"Intellectual Property Rights (IPR)"** என்னும் மாநிலஅளவிலான ஒருநாள் பயிற்சிப் பட்டறை சிறப்பாக நடந்தேறியது.

2021-2022 ஆண்டிற்கான **Annual Quality Assurance Report (AQAR)**அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது. நம் கல்லூரி இணையதளம், இம்மையத்தின் மூலமாக, நம் கல்லூரியின் அன்றாட நிகழ்வுகளை, கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 5. Extension Activities :

ஒரு மாணவனுக்கு படிப்பைத் தவிர, அவரவர் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட துறையில் தனித்திறமையை வளர்க்க, வேலைக்குச் செல்வோர், சுயதொழிலில் ஈடுபடுவோர், ராணுவம், போலீஸ், விளையாட்டில் ஈடுபடுவோர் மற்றும் நுண்கலை என்று சொல்லக் கூடிய **Fine Arts**-ல் ஈடுபடுவோர் என்று முதலாமாண்டு மாணவ, மாணவியர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்கு வாரம் ஒரு முறை சிறப்பு வகுப்புகள் பேராசிரியர்களால் நடத்தப்படுகின்றது. இதன் பயனாக நமது கல்லூரியில் 3 ஆண்டுகள் முடித்து வெளியே செல்லக் கூடிய ஒவ்வொரு மாணவனும், ஒரு துறையில் சிறந்து விளங்கி, தமது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பதில் பெருமை கொள்கிறேன்.

## 6. Staff Grievances Redressal Cell:

நமது கல்லூரியில் ஆசிரியர் - அலுவலர் குறை தீர் மன்றத்தின் மூலமாக ஆசிரியர் - அலுவலர் பல்வேறு குறைகளை கேட்டறிந்து அவைகளுக்கு மிகச் சிறந்த முறையில் மூத்தப் பேராசிரியர்கள் மற்றும் முதல்வர் அவர்களின் ஆலோசனைகளின்படி தீர்வு காணப்பட்டது. இந்த மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக **Dr. S.** பாலமுருகன், துணை முதல்வர் மற்றும் வணிகவியல் துறைத்தலைவர், அவர்கள் சிறப்பாகச் செயல்பட்டு ஆசிரியர், அலுவலரின் நலனில் அக்கறை கொண்டு ஆசிரியர்-அலுவலர் குறை தீர் மன்றத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

## 7. நுண்கலை மன்றம்

76வது சுதந்திரதினவிழாவில் நமது கல்லூரி நுண்கலைமன்ற மாணவ, மாணவியர்கள் ஒருங்கிணைந்து 15.08.2022 அன்று தேசிய ஒருமைப்பாட்டை பறைசாற்றும் விதமாய் சிறப்பான நடன நிகழ்வை வழங்கினார்கள்.

நுண்கலை மன்றம் மாணவ, மாணவியர்கள் 13.10.2022 அன்று தேனி நேரு யுவகேந்திரா சார்பாக நடத்தப்பட்ட தேனி மாவட்ட அளவிலான 6 விதமான

கலை இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு ஆறில் நான்கு (பேச்சு, விவாத மேடை, ஓவியம், கவிதை) போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்று பரிசுத் தொகையுடன் மாநில அளவிற்கான போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

தேனி JCI Honey Bee சார்பாக 19.10.2022 அன்று நடைபெற்ற கலை இலக்கிய போட்டிகளில் நுண்கலை மன்ற மாணவர்கள் கலந்து கொண்டு நான்கு போட்டிகளில் பரிசுகளை வென்றனர்.

22.02.2023 அன்ற மதுரை மங்கையர்கரசி பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற கலை இலக்கியப் போட்டிகளில் நமது நுண்கலை மன்ற மாணவியர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர். இதில் 37 கல்லூரிகள் கலந்து கொண்ட நிலையில், நம் கல்லூரி குழு நடனம் மற்றும் அலங்கார நடை என இரண்டு போட்டிகளில் பரிசுகளை வென்றது.

தேனி மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி பாரத் நிக்கேத்தன் பொறியியல் கல்லூரியில் 17.03.2023 அன்று நடைபெற்ற BNEC FEST-2023 என்ற கலை இலக்கிய போட்டிகளில் நமது கல்லூரி இளங்கலை மற்றும் முதுகலை மாணவ, மாணவியர்கள் பல்வேறுபட்ட போட்டிகளில் கலந்து கொண்டு தொடர்ச்சியாக நான்காவது முறையும் சுழற்கோப்பையை வென்று நமது கல்லூரிக்கும் நுண்கலை மன்றத்திற்கும் பெருமை சேர்த்தனர்.

## 8. புதுமைப் பெண் திட்டம்

இந்த கல்வியாண்டில் நமது தமிழக அரசால் அறிமுகப்பபடுத்தப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று கல்லூரியில் பயிலும் மாணவிகளில் முதல் நிலையில் 29 மாணவிகளும், இரண்டாம் நிலையில் 24 மாணவிகளும் மொத்தம் 53 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1000/- பெற்று இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகின்றனர். இதன் இணைப்பு அதிகாரியாக தமிழ்த்துறைத்தலைவர் லெ.அலமேலு அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 9. நான் முதல்வன் திட்டம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் நான் முதல்வன் திட்டத்தில் நமது கல்லூரியில் இந்த கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவர்களுக்கு Cambridge Course, இரண்டாமாண்டு மாணவர்களுக்கு Microsoft office essentials, மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு PBL Android app development, Project Based Learning, Fintech Course – 1, Medical Coding, IBM Skills Build நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் மொத்தம் 1493 பேர் சேர்ந்துள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற FDP- கருத்தரங்கில் நமது கல்லூரி 8 பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இதன் இணைப்பு அதிகாரியாக இயற்பியல்துறைத்தலைவர் ஜி.ராஜ்மோகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 10. துறை வாரியான செயல்பாடுகள் :

### A. வணிகவியல் துறை (DEPARTMENT OF COMMERCE)

வணிகவியல் துறையின் சார்பாக இந்த நடப்பு கல்வி ஆண்டில் முனைவர் A.சுஜாதா அவர்களின் வழிகாட்டிதலில் இரண்டு பேரும் மற்றும் முனைவர் T.ராமலட்சுமி அவர்களின் வழிகாட்டுதலில் ஒரு நபரும் ஆகமொத்தம் மூன்று பேர் முனைவர் பட்டம் பெற்று உள்ளனர்.

21.10.2022-ம் ஆண்டு துறையின் சார்பாக இளங்கலை மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு "வரவேற்பு நிகழ்ச்சி" நடைபெற்றது

இந்த கல்வி ஆண்டில் துறையின் சார்பாக நான்கு கருத்தரங்கு நடைபெற்றுள்ளது அவற்றில் முதலாவதாக 21/10/2022 அன்று 'Recent Amendments In Income Tax And GST" என்ற தலைப்பில் CA.P.Balasubramani.,M.Com.,FCA.,ACS.,DISD(ICAI) சிறப்புரை வழங்கினார்.

18/08/2022 அன்று 'Application of Research Methology in Social Science" என்ற தலைப்பில் Dr.P.Chellasamy., Professor of Commerce, Bharathiar University சிறப்புறையாற்றினார்.

14/10/2022 அன்று 'Research Ethics for budding Researchera" என்ற தலைப்பில் Dr.D.Ramani Controller of Examination, Mother Theresa Womens' University Kodaikanal கலந்துகொண்டு சிறப்புறையாற்றினார்.

07/12/2022 அன்று "International Business Strategies"; என்ற தலைப்பில் Dr.BUSHAN D.SUDHAKAR., Ph.D., Professor and HOD , Department of International Business School of Management, Pondicherry Central University சிறப்புறையாற்றினார்.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி 04.02.2023 முதல் வணிகவியல் துறையின் சார்பாக சுமார் 90 மாணவ மாணவியர் குறைந்த கட்டணத்தில்(ரூ.1600) Tally Prime Course Class Ananth Computer centre – Bodinayakanur உடன் சேர்ந்து வாரம் தோறும் சனிக்கிழமை சிறப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மேலும் நமது துறை மாணவ மாணவிகள் துறைத்தலைவரின் வழிகாட்டுதலின் படி மதுரை "மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நம் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். இம்மாணவர்களுக்கு உறுதுணையாக எமது துறையில் இருந்து Dr.S.Vijayalakshmi, Dr.S.Yogapriyadharshini மற்றும் Dr.S.Nagalingam அவர்கள் உடன் சென்றனர். இந்நிகழ்ச்சியில் எமது துறையின் மாணவ மாணவியர் 'Add Scaler" போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளனர்.

இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் 05.03.2023 முதல் 07.03.2023 வரை கொச்சி, கேரளாவிற்கு முனைவர்.ஜி.தங்கதுரை அவர்கள் தலைமையில் கல்விச் சுற்றுலா சென்றனார்.

இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகள் 05.03.2023 முதல் 06.03.2023 வரை கூர்க் மற்றும் மைசூர் முனைவா.எஸ்.விஜயலெட்சுமி, முனைவர்.எஸ்.யோகபிரியதர்ஷினி மற்றும் திரு.கே.மதன்குமார் அவர்கள் தலைமையில் கல்விச் சுற்றுலா சென்றனார்.

AMET University மற்றும் Human Resource Development Centre இணைந்து நடத்திய 'Ethics in Academic Research writing" என்ற இணையவழி புத்தாக்க பயிற்சியில் 30.01.2023 முதல் 04.02.2023 வரை எஸ்.பாலமுருகன், அ.சுஜாதா, கே.கிருஷ்ணகுமார், டி.ராமலெட்சுமி, ஜி.தங்கதுரை, கே.வனீத்தீஸ்வரி, எஸ்.விஜயலெட்சுமி, எஸ்.யோகபிரியதர்ஷினி, இ.பாப்புலெட்சுமி, எஸ்.நாகலிங்கம், கே.மதன்குமார் வணிகவியல் துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

22.02.2023 - அன்று நமது கல்லூரி மற்றும் Tamil Nadu State council for science and Technology, இணைந்து நடத்திய (State Level Technical workshop on Intellectual property Rights) ஒரு நாள் மாநில அளவிலான பயிற்சி பட்டறையில் எஸ்.பாலமுருகன், அ.சுஜாதா, கே.கிருஷ்ணகுமார், டி.ராமலெட்சுமி, ஜி.தங்கதுரை, கே.வனீத்தீஸ்வரி, எஸ்.விஜயலெட்சுமி, எஸ்.யோகபிரியதர்ஷினி, இ.பாப்புலெட்சுமி, எஸ்.நாகலிங்கம், கே.மதன்குமார் வணிகவியல் துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் state council for Higher Education சார்பில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 05.05.2022 மற்றும் 06.05.2022 - அன்று நடத்தப்பட்ட In Service Teacher training Programme – யில் எஸ்.பாலமுருகன், அ.சுஜாதா, கே.கிருஷ்ணகுமார், டி.ராமலெட்சுமி, ஜி.தங்கதுரை, கே.வனீத்தீஸ்வரி, எஸ்.விஜயலெட்சுமி, எஸ்.யோகபிரியதர்ஷினி, இ.பாப்புலெட்சுமி, எஸ்.நாகலிங்கம், கே.மதன்குமார் வணிகவியல் துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

Dr.S.Balamurugan அவர்கள் 2022 - 23 - ஆம் கல்வி ஆண்டு முதல் மதுரை காமராசர் பல்கலைகழக வணிகவியல் துறை "பாடத்திட்ட வல்லுனர் குழு உறுப்பினராக" நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு நாட்டு நலப்பணித் திட்ட ஆலோசனை குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நமது கல்லூரியில் சுயநிதி பிரிவு வணிகவியல் துறை மாணவர்களுக்கு "Recent Trends in Banking Technology" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். HKRH college – உத்தமபாளையத்தில் நடைபெற்ற Pre Ph.D Viva-Vice வெளிமதிப்பீட்டாளராகச் சென்றுள்ளார்.

உத்தமபாளையம் HKRH கல்லூரிக்கு B.Com(Banking) பாடத்திட்டத்திற்கு University Nominee – ஆக 09/03/2023 முதல் 08/03/2026 வரை மூன்று ஆண்டுகளுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் நியமிக்கபட்டுள்ளார். மேலும் இவரது மேற்பார்வையில் நான்கு ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

25.04.2023 அன்று முனைவர்.எஸ்.பாலமுருகன் அவர்கள் "நவீன வங்கிகளின் வளர்ச்சி" என்ற தலைப்பில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வீரபாண்டியில் சிறப்பரையாற்றினார்.

முனைவர். Dr.A.Sujatha அவர்கள் சிவகாசி ANJAC கல்லூரி முதுகலை வணிகவியல் துறையின் Board of Studies-ல் Subject Expert (பாட நிபுணர்) ஆக உள்ளார். மற்றும் ANJAC கல்லூரியில் முதுகலை வணிகவியல் துறையில் ஆராய்ச்சி குழுமத்தில் External Expert – ஆக மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். LDC, Sri Krishna College of Arts and Science, HKRH college போன்ற கல்லூரிகளுக்கு Questions Setter- ஆக பணியாற்றி வருகிறார். சிவகாசி ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரியில் வணிகவியல் துறை சார்ப்பில் "விலை நிர்ணயம்" என்ற தலைப்பில் 02.09.2022 அன்று சிறப்பு சொற்பொழிவு ஆற்றியுள்ளார். 08.02.2023 அன்று HKRH college -ல் நடத்தப்பட்ட One day State level workshop on "Statistical Tools used in Research" என்ற தலைப்பில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அந்த தலைப்பில் சிறப்புரை வழங்கியுள்ளார்.

இந்த ஆண்டு மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை UGC Care List I&II- ல் வெளியிட்டுள்ளார். மேலும் இவரது மேற்பார்வையில் இரண்டு ஆராய்ச்சியாளர்கள்

தங்களது ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர். Gandhiyan Thoughts மற்றும் swyam – போன்ற அமைப்புகளுக்கு ஒருங்கினைப்பாளராக இருக்கிறார்.

முனைவர்.**V.Krishnakumar**அவர்கள் கடந்த 2022 - 23 ஆம் கல்வியாண்டில் சிறந்த ஆராய்ச்சியாளருக்கான விருதினை Indian Academic Researchers' Association, Kolkata – விடமிருந்து பெற்றுள்ளார். மேலும் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளைத் தொடர்ச்சியாக சமர்ப்பித்து வருவதன் மூலம் இந்த நிறுவனம் அவருக்கு வாழ்நாள் உறுப்பினர் (Life Time Membership) Status வழங்கி கௌரவித்துள்ளது.

முனைவர்.**V.Krishnakumar** அவர்கள் தமிழக அரசின் School Innovation development project (SIDP) என்ற திட்டத்திற்கு மதிப்பீட்டாளராக (Jury) தமிழக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான பணியினை செவ்வனே செய்து கொண்டு வருகிறார். இதன் மூலம் தொழில் முனைவர் ஆக வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் பலர் அரசின் நிதி உதவியைப் பெற்று தங்களது தொழில்களைத் தொடங்கியுள்ளனர்.

டெல்லிப் பல்கலைக்கழகம் மற்றும் ராமானுஜன் கல்லூரியின் Teaching Learning Centre இணைந்து Commerce and Management என்ற தலைப்பில நடத்திய 14 நாட்கள் புத்தாக்க பயிற்சி 27.05.2022 முதல் 09.06.2022 வரை நடைபெற்றது அதில் கலந்துகொண்டு வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைகழகத்தின் External Examiner ஆக B.Com செய்முறைத் தேர்வுகளை நடத்துவதற்காக அரசு கலைக் கல்லூரி ஆண்டிபட்டி சென்று வந்துள்ளார். மேலும் இவர் கல்லூரியில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பாளாராகவும் செயல்பட்டு வருகின்றார்.

முனைவர்.**T.Ramalakshmi** அவர்கள் டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் ராமானுஜன் கல்லூரியின் Teaching Learning Centre இணைந்து Commerce and Management என்ற தலைப்பில் நடத்திய 14 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி 27.05.2022 முதல் 09.06.2022 வரை கலந்து கொண்டு வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளார்.

இந்தக் கல்வியாண்டு முதல் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டு தனது பணிகளை திறன்பட மேற்கொண்டு வருகிறார்.

இவரது மேற்பார்வையில் நான்கு ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

முனைவர்.**G.Thangadurai** அவர்கள், Teaching Learning Centre Ramanujam college , university of Delhi 29.04.2022 முதல் 06.05.2022 வரை நடைபெற்ற "புத்தாக்கப் பயிற்சியில்" கலந்து கொண்டார்.

MS University GRD college ஆகியவற்றிற்கு Question Setter ஆக இந்த ஆண்டு பணியாற்றியுள்ளார்.

Krishnasamy கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற B.Com(CA) Computer Practical தேர்வுக்கு External – ஆக சென்றுள்ளார்.

முனைவர்.**K.Vanitheeswari** அவர்கள் Teaching Learning Centre, Ramanujan College, University of Delhi – ல் இணையவழி மூலம் நடைபெற்ற 14 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி பெற்றுள்ளார். (13.07.2022 முதல் 27.07.2022 வரையில்)

முனைவர்.**K.Vanitheeswari** அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி துறையில் (Ph.D) Research advisory committee-ல் உறுப்பினராக உள்ளார்.

முனைவர் **S.Vijayalakshmi** Teaching Learning Centre Ramanujam college , university of Delhi 29.04.2022 முதல் 06.05.2022 வரை நடைபெற்ற "புத்தாக்கப் பயிற்சியில்" கலந்து கொண்டார்.

முனைவர்.**S.Yogapriyadharshni** அவர்கள்Teaching learning Centre, Ramajujan college மூலம் இணையவழி மூலம் 14 நாட்கள் புத்தாக்க பயிற்சி பெற்றுள்ளார்.(13.07.2022 முதல் 27.07.2022 வரை)

**Mrs.E.Pappulakshmi** அவர்கள் Kanpur Philosophers A UGC-Care Journal- ல் "Factors Influencing satisfaction of Rural women Etrepreneurs in Theni DT-An Empirical Study என்ற ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட்டுள்ளார். "A Study on The Impact of Socio-Demographic Factors on Entrepreneurial Intention of Students with Special Refers to Theni DT" என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையை UGC-Care Journal- ல் வெளியிட்டுள்ளார்.

Ramanujam college,Unviersity of Delhi இணையவழி மூலம் 13.07.2022 முதல் 27.07.2022 வரை நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டார். AMET University மூலம் நடைபெற்ற ETHICS in Academic Research writing என்ற தலைப்பில் நடைபெற்ற நான்கு நாட்கள் FDP – ல் கலந்து கொண்டார்.

முனைவர்.**S.Nagalingam** Capital Market and Income Tax & GST Courses என்ற தலைப்பில் MKU மற்றும் Mother Teresa University நடத்திய FDP-ல் கலந்து கொண்டார்.

"National Intellectual property Awareness Mission" IP Awareness Training programme- ல் கலந்து கொண்டார்.

முதுகலை மற்றும் ஆராய்ச்சி வணிகவியல் துறையைச் சார்ந்த முதுகலை முதலாம் ஆண்டு பயிலும் செ.சுரேந்திரபாண்டியன் என்ற மாணவன் தேசிய அளவில் கோவா-வில் நவம்பர் மாதம் நடைபெற்ற வேல்கம்பு போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு வென்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். மேலும் சர்வதேச அளவில் நேபாளத்தில் டிசம்பர் மாதம் நடைபெற்ற வேல்கம்பு போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு வென்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

## B. வேதியியல் துறை : (DEPARTMENT OF CHEMISTRY)

06.02.2023 அன்று மேரிமாதா கல்லூரியில் நடைபெற்ற வேதியியல் பாடத்திற்கான வினாடி-வினா போட்டியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் எம்.சுபாஷ், வி.ரமேஷ்கண்ணன், எஸ்.ஜெயபிரகாஷ் ஆகியோர் முதல் இடம் பெற்று வேதியியல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

14.02.2023 அன்று அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற வேதியியல் பாடத்திற்கான வினாடி-வினா போட்டியில் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் எம்.சுபாஷ், வி.ரமேஷ்கண்ணன், எஸ்.ஜெயபிரகாஷ் ஆகியோர் மூன்றாம் இடம் பெற்று வேதியியல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

உயர்கல்விக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்கில் வேதியியல்துறையின் முதலாம் ஆண்டு மாணவர்கள் அனைவரும் 15.02.2023 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு களப்பணியாக சென்று வந்தார்கள்.

தமிழ்நாடு அரசின் அறிவியல்துறை சார்பாக 22.02.2023 அன்று 'Intellectual Property Right" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வேதியியல் துறையின் அனைத்துப் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரியில் 10.11.2022-ல் அறிவுசார் சொத்து என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் வேதியியல் துறையை சார்ந்த அனைத்து பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்

மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் டிசம்பர் 19, 20-2022ல் நடைபெற்ற material Science என்ற கருத்தரங்கில் முனைவர்.ஆர். கார்த்திகா அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லூரியில் Sollar cells என்ற தலைப்பில் 12.01.2023 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் முனைவர்.கார்த்திகா வழிகாட்டுதலில் மாணவர்கள் சி.முத்தரசு, பி.சம்பத்பாபு, ஏ.வேல்முருகன், எம்.மணிகண்டன் மற்றும் கே.பிரியதர்ஷினி ஆகியோர் தங்களின் புதிய வெவ்வேறு ஆராய்ச்சிக் கட்டுரையை சமாப்பித்தனர்.

ஆசியன் பாலிமர் சார்பாக கோவாவில் 23.02.2023 முதல் 25.02.2023 வரை நடைபெற்ற கருத்தரங்கில் ‘Textile Polution” என்ற தலைப்பில் முனைவர் கார்த்திகா அவர்கள் உரையாற்றியுள்ளார்.

முனைவர்.கார்த்திகா வழிகாட்டுதலில் மாணவிகள் R.G.நிரஷ்சனா, எம்.லாவண்யா ஆகியோர் 15.02.2023 மற்றும் 16.02.2023 அன்று கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் தங்களது புதிய ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தனர்.

வேதியியல் துறையின் ஆராய்ச்சி மாணவி T.சூர்யகலா கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் தன்னுடைய புதிய ஆய்வு கட்டுரையைச் சமர்ப்பித்து பேசினார்.

வேதியியல் துறையின் ஆராய்சசி மாணவி T.சூர்யகலா தன்னுடைய இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

## C. கணிதத்துறை (DEPARTMENT OF MATHEMATICS)

பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்ட இதழ்களில் கணிதத்துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் முனைவர்.கே.கிருஷ்ணன் -4, முனைவர்.வி.ஹேமலதா -2, முனைவர்.வி.செந்தில்குமார் -2, முனைவர். ஆர்.ரோகினி -1 ஆகியோர் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

05.08.2022 அன்று சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் E.தங்கபாண்டி அவர்கள் ஒரு நாள் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "Introduction to advanced Mathematics என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

10.03.2023 அன்று சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் M.பிச்சைமணி அவர்கள் ஒரு நாள் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "Metric Space and its application” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

11.10.2022 அன்று வீரபாண்டி, அரசு கலைக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் P.முருகதாஸ் அவர்கள் ஒரு நாள் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "How Maths can save your life” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கணிதத்துறைத்தலைவர், முனைவர்.அ.மகேஸ்வரன் அவர்கள் வீரபாண்டி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றியுள்ளார்.

நிகழ்நிலை மூலம் முனைவர்.வி.ஹேமலதா அவர்கள் 10.08.2022 முதல் 12.08.2022 வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் பங்கு பெற்றார்.

நிகழ்நிலை மூலம் முனைவர்.ஆர்.ரோகினி அவர்கள் 28.01.2023 முதல் 11.02.2023 வரை இராமானுஜம் கல்லூரி, டெல்லிப் பல்கலைக்கழகம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் பங்கு பெற்றார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாணவி.அ.அனுபிரியதர்ஷினி Ph.D பட்டமும் மற்றும் R.ரம்யா, R.ஜெகநாதன் ஆகிய இருவர் தங்களது ஆய்வறிக்கையை மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

30.12.2022 அன்று மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் NIRF India Ranking 2023 என்ற பட்டறையிலும், 14.12.2022, 15.12.2022 ஆகிய இரு நாட்கள் இராஜபாளையம் Raju’s கல்லூரியில் NAAC தொடர்பான கருத்தரங்கிலும் மற்றும் 10.11.2022 அன்று National Intellectual Property Awarness Mission என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கிலும் கலந்து கொண்டார்.

27.10.2022 அன்று ஜெயராஜ் அன்னபாக்கியம் பெண்கள் கல்லூரி, பெரியகுளத்தில் ‘Emerging Trends in Application of Mathematics” என்ற தலைப்பில் நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் கணிதத்துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

முனைவர்.வி.செந்தில்குமார் அவர்கள் 25.01.2023 மற்றும் 13.02.2023 ஆகிய இரு தினங்களில் வெவ்வேறு கல்லூரிகளில் சிறப்புரை ஆற்ற சென்று வந்துள்ளார்.

04.03.2023 அன்று முனைவர்.A.R.மணிகண்டன் அவர்கள் மதுரை பல்கலைக்கழகம் ஆராய்ச்சி வழிகாட்டுதல் உரிமம் பெற்றுள்ளார்.

30.01.2023 முதல் 03.02.2023 வரை முனைவர்.கே.கிருஷ்ணன் மற்றும் முனைவர்.வி.ஹேமலதா Data Analytics Computer பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டனர்.

கணிதத்துறையில் ஆன்லைன் மூலமாக (Swayam online Course) 4 பேராசிரியர்கள், 10 இளங்நிலை மற்றும் 7-முதுநிலை மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

## D. பொருளியல் துறை (DEPARTMENT OF ECONOMICS)

பொருளியல் துறை சார்பாக மாணவர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 20.10.2022 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மதுரை கல்லூரி பொருளியல் துறை பேராசிரியர் முனைவர்.S.கார்த்திகேயன் அவர்கள் "இந்திய வேளாண்மைத் துறையின் நிலை" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார். இதில் அனைத்து பொருளாதாரத்துறை மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் முனைவர்.எஸ்.செந்தில்குமார் அவர்கள் 25.02.2023அன்று நடந்த 42 Annual conference of the Association of economists of Tamil Nadu சார்பாக "Young Economist" என்ற விருதினைப் பெற்றார்.

முனைவர்.எஸ்.செந்தில்குமார் அவர்கள் வழிகாட்டுதலின்படி ஒரு ஆய்வு மாணவியை உருவாக்கியுள்ளார். மேலும் பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வுக்கட்டுரை ஒன்றினையும் வெளியிட்டார் மற்றும் இணையவழியில் புத்தாக்க பயிற்சியில் கலந்து கொண்டு அதற்கான சான்றினைப் பெற்றார். மேலும் தேசிய, பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு அதற்கான சான்றினையும் பெற்றுள்ளார்.

பேராசிரியை முனைவர்.து.ஹேமா அவர்கள் "பொருளாதார வரலாற்றுச் சிந்தனை" என்ற பாடநூலை வெளியிட்டுள்ளார் மற்றம் பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வுக்கட்டுரை ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்.

ஏப்ரல் - 2020 மதுரை காமராசர் பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் பொருளாதாரத்துறையைச் சார்ந்த மாணவிகள் வீ.வீரலட்சுமி 2ஆம் இடத்தையும், ஆர்.சந்தியா 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

11.03.2023 அன்று மதுரைக் கல்லூரியில் பொருளியல் துறை சார்பாக பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. அதில் எமது பொருளியல்துறை மாணவர்கள் குழு நடனத்தில் 3 ஆம் பரிசினைப் பெற்றுள்ளார்.

## E. வரலாற்றுத் துறை (DEPARTMENT OF HISTORY)

### துறை நடவடிக்கைகள்

ஆகஸ்ட் 11 முதல் 14-ம் தேதி வரை 75வது சுதந்திரதின அமுதப் பெருவிழா கொண்டாட்டத்தின் வாயிலாக "இந்திய தேசிய இயக்கம்" என்னும் தலைப்பில் இணையவழி வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்களுக்கு இணையவழி சான்றிதழ் வழங்கப்பட்டது.

11.08.2022 அன்று "இந்திய சுதந்திரப் போராட்டம்" என்னும் தலைப்பில் வரலாற்று பேராசிரியர்கள் முனைவர்.அ.ஞானசேகரன் மற்றும் முனைவர்.சி.மாணிக்கராஜ்

ஆகியோர் கல்லூரியில் உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

13.08.2022 அன்று "தமிழக சுதந்திர போராட்ட இயக்கம்" என்னும் தலைப்பில் வரலாற்றுப் பேராசிரியர்கள் திரு.ஆர்.கபேஷ் மற்றும் முனைவர்.எம்.கனகராஜ் ஆகியோர் கல்லூரியில் உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

17.10.2022 அன்று வரலாற்றுத் துறையில் "தமிழக சுதந்திர போராட்ட நினைவுகள்" எனும் பொருண்மையில் தேனி மாவட்ட சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசு நலஅமைப்பாளரால் ஒரு நாள் சிறப்புக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

**பேராசிரியர்களின் செயல்பாடுகள் முனைவர்.அ.ஞானசேகரன்**

இந்திய அரசால் ஆணையிடப்பட்டு நடத்தப்பட்ட 75வது சுதந்திரதின அமுதப் பெருவிழாவின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு ஆகஸ்ட் 11 முதல் 17 வரை சுதந்திரப் போராட்ட இயக்கம் சார்ந்த பல்வேறு போட்டிகள் மாணவ , மாணவியர்களுக்கு நடத்தப்பட்டது.

19.10.2022 அன்று தேனி திரவியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நடத்திய ஒரு நாள் கருத்தரங்கிற்கு சிறப்புப் அமைப்பாளராக கலந்து கொண்டார்.

வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரிக்கு முதுகலை மற்றும் இளங்கலை வரலாற்றுத் துறைக்கு வினா அமைப்பாளராக செயல்பட்டுள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைககழக முதுகலை வரலாற்றுத்துறை பாடவடிவமைப்பு-ல் உறுப்பினராக உள்ளார்.

**முனைவர்.சி.மாணிக்கராஜ்**

**நூல் வெளியீடு**

12.10.2022-ல் "தேனி மாவட்ட நடுகற்கள் என்னும் நூல் வெளியிட்டுள்ளார்.

**கண்டுபிடிப்புகள்**

15.09.2022-ல் திண்டுக்கல், வேடசந்தூர், தொண்டியில் 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகள் கண்டுபிடிக்கப்பட்டது

திண்டுக்கல், நத்தம் பகுதியின் தொன்மையான நடுகற்கல் கண்டுபிடிக்கப்பட்டன. செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பபட்டது.

**சிறப்பு அழைப்பாளர்**

21.01.2023 National heritage trust, Madurai –ஆல் நடத்தப்பட்ட இணையவழி கருத்தரங்கில் சிறப்புப் பேச்சாளராக உரையாற்றினார்.

25.01.2023-ல் ஹாஜி கருத்தராவுத்தர் கலைக்கல்லூரி, உத்தமபாளையம் வரலாற்றுத்துறை நடத்திய ஒரு நாள் கருத்தரங்கில் சிறப்புப் பேச்சாளராக உரையாற்றினார்.

10.01.2023-ல் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர்களுக்கு தொல்லியல் வழிகாட்டியாக செயல்பட்டார்.

03.03.2023-ல் மதுரை நகரத்தின் அங்காளம்மான் கல்லூரி வரலாற்றுத்துறை நடத்திய தேசிய கருத்தரங்கில் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டார்.

06.03.2023-ல் தேனியில் நடந்த முதல் புத்தகக் கண்காட்சியில் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டார்.

மதுரை மாவட்ட வைகை இலக்கியத் திருவிழாவினை நடத்தும் தேனி மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலராக மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுரை FM Rainbo வானொலி நிலையத்தில் 26.10.2022-அன்று தமிழர் வாழ்வில் நடுகற்கள் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

பாண்டிய நாட்டில் புதிய கண்டுபிடிப்பு எனும் நூலில் 10 அத்தியாயங்களின் ஆசிரியராகப் பிரசுரித்துள்ளார்.

**முனைவர்.ஜி.கருப்புசாமி**

**பங்களிப்பு**

16.09.2022 முதல் 29.09.2022 வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் யுஜிசி மனிதவள மேம்பாட்டு மையத்தால் நடத்தப்பட்ட புத்தாக்கப் பயிற்சியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கா.கருப்புசாமி அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார்.

25.01.2023 அன்று தேனி மாவட்டத்தில் நடந்த தேர்தல் கல்வியறிவு குழுவின் மூலம் கல்லூரி அளவில் நமது கல்லூரி ஒருங்கிணைப்பாளராக கா.கருப்புச்சாமி அவர்கள் தேர்ந்தேடுக்கப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு 17.10.2022 முதல் 12.10.2022 வரை சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் நமது கல்லூரியின் சார்பாக மூன்றாம் ஆண்டு பி.ஏ.ஆங்கில மாணவி தனுஷியா என்பவர் மாவட்ட அளவில் மூன்றாம் பரிசும் சான்றிதழும் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பெற்றார்.

## F. இளங்கலை கணினி அறிவியல் (Computer Science Department)

**முனைவர்.*S*.சிவக்குமார்,கல்லூரிமுதல்வர்** அவர்கள் 27.01.2023 மற்றும் 28.01.2023 அன்று Nadar Saraswathi College of Arts & Science, Theni கல்லூரியில் நடைபெற்ற “Integrated Technologies in Computer Applications-ICITCA’23”என்னும் பன்னாட்டு கருத்தரங்கில் “Cloud Computing” எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

மேலும் 28.02.2023 அன்று SCISM Matric. Hr. Sec. School, Bodinayakanur பள்ளியில் நடைபெற்ற "SCI-LAND' 2023" என்னும் அறிவியல் கண்காட்சி விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

Bharath Niketan Engineering College, Aundipatty கல்லூரியில் 17.03.2023 அன்று நடைபெற்ற" BNEC FEST 2023" என்னும் விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

Kamarajar Vidhayalaya Matriculation higher secondary school, Bodi-ல் 10.01.2023 அன்று நடைபெற்ற பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரைஆற்றினார்.

Sowndeeswari Middle school-ல் 25.03.2023 அன்று நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரைஆற்றினார்.

M.K.Middle School, Bodi- Meenakshipuram-ல் 07.04.2023 அன்று நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

Presidency university, Bengaluru – ல் 09.12.2022 மற்றும் 10.12.2022 நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு "Efficient Prediction of Diabetic Coronary Heart Disease Using Artificial Neural Network" -என்ற தலைப்பில் ஆய்வுகட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

Journal of IoT in Social, Mobile, Analytics, and Cloud,என்னும் Journal-ல் "A Study on Prediction of Diabetic Coronary Heart Disease Using Machine Learning Algorithms" என்னும் தலைப்பில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

Journal of Water and Environmental Nanotechnology (JWENT),என்னும் Scopus Journal-ல் "Fabrication of MnWO4 modified ZnSnanocomposite as an effective nano adsorbent: Experimental investigation and neural network modelling" என்னும் தலைப்பில் ஆய்வுகட்டுரை சமர்ப்பித்துள்ளார்.

முனைவர்.R.முருகேசன் அவர்கள் தேனி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "Open Source Technologies" எனும் தலைப்பில் சிறப்புரைஆற்றினார். ராமகிருஷ்ணா மிஷின் வித்யாலாயா, கோயம்புத்தூரில் Exterrnal Expert-ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

04.08.2022 அன்று முதலாம் ஆண்டு கணினி அறிவியல் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முதலாம் ஆண்டு மாணவர்களை துறைத்தலைவர் முனைவர்.கே.மாடசாமி வாழ்த்தி, கல்லூரியின் நடத்தை

விதிகளை விளக்கினார். கணினி அறிவியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர்.ஆர்.முருகேசன் துறையின் நீண்ட வரலாறு குறித்துப் பேசினார். கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியை முனைவர்.கே.நித்தியானந்தகுமாரி, கணினிப் பட்டதாரிகளுக்கான "தொழில் வாய்ப்புகள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். கணினி அறிவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.சி.வசந்தி நன்றி கூறினார்.

தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி 11.05.2022 அன்று துறை மாணவர்கள் அனைவருக்கும் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் அதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில், துறை மாணவர்கள் இளமைப் பருவத்தில் போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகளைப் பற்றி புரிந்து கொண்டது மட்டுமல்லாமல் போதைப் பொருள் பயன்படுத்தமாட்டோம் என்ற உறுதி மொழியும் எடுத்தனர். இந்நிகழ்ச்சியில் அனைத்து ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் “International Programmer’s Day” செப்டம்பர் 13 அல்லது ஆண்டின் 256-வது நாளில் கொண்டாடப்படுகிறது. புதுமை மற்றும் திட்டங்களை வடிவமைப்பதன் மூலம் நம் வாழ்க்கையை எளிதாக்கும் புரோகிராமர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை இந்த நாள் கௌரவிக்கின்றது. 13.09.2022 அன்று துறையின் சார்பில் ‘International Programmer’s Day” கொண்டாடப்பட்டது. மாணவ, மாணவியருக்கு வினாடி-வினா(Quiz) மற்றும் நிரலாக்க போட்டி (Coding Competition) என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. உதவிப்பேராசிரியை முனைவர்.கே.நித்தியானந்தகுமாரி வரவேற்றார். முனைவர்.எஸ்.சிவக்குமார், முதல்வர் மற்றும் முனைவர்.கே.மாடசாமி, இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர் முனைவர்.ஆர்.முருகேசன், இணைப்பேராசிரியர் மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர்.கே.நித்தியானந்தகுமாரி ஆகியோர் குறியீட்டு நெறிமுறைகள், மென்பொருள் நடைமுறைகள் சார்ந்த தொழில்நுட்பம் பற்றி விளக்கிப் பேசினார்கள். இறுதியாக போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

27.09.2022 அன்று துறை சார்பாக ‘choice of careers” என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் R.சுதர்சன், Head of Live wire, Chennai அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கம்ப்யூட்டர் கிளப் ஆரம்ப விழாவில்இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ) முனைவர்.கே.மாடசாமி அவர்கள் வரவேற்றார். விழாவிற்கு முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் தலைமை வகித்து தலைமையுரை ஆற்றினார். Mr.Sudharshan R.Pillai, Head, Livewire, சென்னை அவர்கள் ‘Choice of Careers”

என்ற தலைப்பில் உரையாற்றினார். முனைவர். ஆர்.முருகேசன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

07.10.2022 அன்று துறை சார்பாக “Android App Development using Kofwin” என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சி பட்டறை நிகழ்வு நடைபெற்றது. இதில் K.அனுப்பிரியன், Trainer, Live wire, Chennai அவர்கள் சிறப்புரையாற்றினார்.

கம்பம் ஆதி சுஞ்சனகிரி பெண்கள் கல்லூரியில், கணினி அறிவியல் துறையால் நடத்தப்பட்ட ‘CAPTCHA’22” என்ற Intercollegiate meet-ல் எமது துறையின் உதவிப்பேராசிரியை திருமதி.எஸ்.மதுமலர் மற்றும் 10 மாணவிகள் பங்கேற்றனர். இதில் நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டு மாணவிகள் பரிசுகளை வென்றனர்.

Intellectual Property Rights (IPR) தொடர்பான இணையவழி கருத்தரங்கு (Webinar) கல்லூரியின் சார்பாக 10.11.2022 அன்று நடைபெற்றது. இதில் கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மூன்றாமாண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். பங்கு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

04.01.2023 அன்று காலை 10.30 மணியளவில் Zoho நிறுவனத்தால் மாணவர்களுக்கு போட்டி தேர்வுகள் குறித்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கணினி அறிவியல், CS & IT துறையின் இறுதியாண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். முனைவர்.கே.மாடசாமி, கணினி அறிவியல் துறைத்தலைவர் அனைவரையும் வரவேற்று பேசினார். Zoho திட்டத்தலைவர் திரு.அழகர்ராஜா, Zoho வேலை வாய்ப்புகள் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார். மாணவர்கள் தங்களின் மென்திறன்களை மேம்படுத்துவது தொடர்பாக சிறப்பு விருந்தினர்களுடன் உரையாடினர். இறுதியாக பேராசிரியர் எஸ்.சுரேஷ்குமார் சுயநிதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர் நன்றியுரை வழங்கினார்.

**G. தமிழ்த்துறை**

17.08.2022 அன்று தமிழத்துறையில் அரசு உதவிபெறும் பிரிவில் திருமதி.மா.சே.ராதா அவர்கள் உதவிப்பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை முன்னிட்டு தேனி மாவட்டத்திற்கு வருகை தந்த செஸ் ஒலிம்பிக் தீபத்தை வரவேற்கும் விதமாய் 26.07.2022 அன்று தேனி புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நம் கல்லூரியின் தமிழத்துறை சார்பாக மாணவ, மாணவியர்களின் தமிழர் கலைகளைப் பறைசாற்றும் கண்கவர் கலை நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து செஸ் தொடர்பான ரங்கோலி மற்றும் வினாடி வினா போட்டிகளும் நடத்தப்பட்டது.

22.01.2023 அன்று தேனி வெஸ்டர்ன் கார்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற பாரதி உலா பேச்சரங்கில் வாக்கினிலே இனிமை வேண்டும் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

தேனி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 30.01.2023 அன்று தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

13.2.2023 அன்று சிவகாசி அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டு ஆய்வரங்கத்தில் "இயற்கையை நேசிப்போம்" என்ற பொருண்மையின் கீழ் இணையவழியில் சிறப்புரையாற்றினார்.

ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியின் 2022-ஆம் கல்வியாண்டிற்கான வினாத்தாள் அமைக்கும் பணியில் உறுப்பினராக உள்ளார்.

வே.மீனா உதவிப்பேராசிரியை தமிழ்நாடு ஆசிரியர் மன்றம் சார்பாக வழங்கப்பட்ட சிறந்த பேராசிரியர்களுக்கான விருதினை 02.10.2022 அன்று பெற்றார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி 26.09.2022 அன்றும் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளையொட்டி 12.10.2022 அன்றும் தமிழ்வளர்ச்சித்துறை சார்பாக கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் அ.பவித்ரா என்ற மாணவி கலந்து கொண்டு முதல் பரிசினை வென்றார். வைகை இலக்கியத் திருவிழா - 2023ஐ ஒட்டி மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியிலும் முதல் பரிசினை பெற்றுள்ளார்.

21.03.2023 அன்று தமிழ்மன்றத்தின் சார்பாக இன்றைய இளைஞர்கள் நடைபோடுவது சாதனைப் பாதையா? வேதனைப் பாதையா? என்ற தலைப்பில் பாரதிச்செல்வர் கவிஞர் பாரதன் அவர்கள் நடுவராகவும், சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றார்.

## H. ஆங்கில துறை: (Department of English)

முனைவர்.சி.பழனிவேல்ராஜன் மற்றும் முனைவர் வி.விமலா ஆகிய இருவரும் தமிழ்நாடு அரசு வழங்கிய "நான் முதல்வன்"திட்டத்தில் 06.02.2023 முதல் 11.02.2023 வரை 6 நாட்கள் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சியில் பங்கெடுத்து வந்துள்ளனர்.

முனைவர்.சி.பழனிவேல்ராஜன் அவர்கள் கடந்த 03.04.2023 அன்று சென்னை SRM பல்கலைக்கழகத்தில் Resource Person- ஆக சென்று திறன் மேம்பாடு குறித்து ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தி வந்துள்ளார்.

முனைவர்.வி.விமலா அவர்களின் வழிகாட்டுதலின்படி இரண்டு பேர் Ph.D முடித்து பட்டம் பெற்றுள்ளனர். மேலும் அவர் UGC அங்கீகாரம் பெற்றுள்ள இதழில் தனது ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி பிரசுரம் செய்துள்ளார்.

முனைவர்.எம்.சுமையா பானு அவர்களின் ஆராய்ச்சி கட்டுரை ஒன்று UGC அங்கீகாரம் பெற்றுள்ள இதழில் பிரசுரமாகி வந்துள்ளது.

ஷேக்ஸ்பியர் உலகதினத்தன்று கோவை KPR கல்லூரி நடத்திய E-Quiz போட்டியில் பேராசிரியர் பி.பிரியங்கா அவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளார்.

மேலும் தமிழக அரசு சார்பில் நடைபெற்ற கலைத் திருவிழாப் போட்டிகளில் பேராசிரியை.வி.விமலா, பேராசிரியை.எம்.சுமையா பானு மற்றும் பேராசிரியை.பி.பிரியங்கா அவர்கள் நடுவர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர்.

## I. தாவரவியல் துறை: (Department of Botany)

Dr.C.கோபி அவர்கள் 10.10.2022 அன்று இந்தியாவின் அறிவுசார் சொத்து அலுவலகத்தால் (Inteellectual Property Office India) ஏற்பாடு செய்யப்பட் தேசிய அறிவுசார் சொத்து விழிப்புணர்வு இயக்கத்தின் (National Intellectural Property Awareness Mission) கீழ் IP விழிப்புணர்வு பயிற்சித் திட்டடத்தில் பங்கேற்றுள்ளார்.

முனைவர்.சி.கோபி 22.08.2022 முதல் 21.08.2025 வரை மூன்ற வருட காலத்திற்கு நமது கல்லூரி ஆசிரியர்களால் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழு உறுப்பினராக (Member to the Academic Council) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிக் பேரவைக்குழு (senate) 03.03.2023 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. ஐந்து உறுப்பினர் ஆட்சிக்குழு பதவிக்கான போட்டியில் கல்லூரி பிரதிநிதி சார்பில் நமது கல்லூரி பேராசிரியர் மற்றும் தாவரவியல் துறைத்தலைவர் முனைவர்.சி.கோபி அவர்கள் 65 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இருந்து மொத்தம் ஒன்பது உறுப்பினர்கள் ஐந்து இடங்களுக்கு போட்டியிட்டனர். போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்தார். இவர் மூன்று ஆண்டுகளுக்கு (02.03.2023) செனட் உறுப்பினராக செயல்படுவார்.

தாவரவியல் துறைத்தலைவர் முனைவர்.சி.கோபி அவர்கள் B.Sc Botany Ancillary 32 மாணவர்களுடன் பெரியகுளம் TNAU-வின் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள ஆய்வகங்கள் மற்றும் தோட்டக்கலை நுட்பங்கள், உரம் தயாரித்தல், உயிர் உரங்கள் போன்றவற்றை பார்வையிட்டு அறிந்து வர 17.03.2023 அன்று கல்வி சுற்றுலா சென்று வந்தனர்.

21.03.2023 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதல் கல்வி பேரவை உறுப்பினர் கூட்டத்தில் (Academic Council Members meetig) நமது கல்லூரியின் தாவரவியல்துறைத்தலைவர் முனைவர்.சி.கோபி அவர்கள் கலந்து

கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர்.ஜே.குமார் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

23.03.2023 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் வரும் 2023-24 கல்வி ஆண்டுக்கான (நான் முதல்வன் பாடத்திட்டத்தில் இணைப்பு பற்றியும்) பாடத்திட்டத்தை வகுப்பதற்காக போர்டு ஆப் ஸ்டடிஸ் கூட்டத்தில் முனைவர். சி.கோபி கலந்து கொண்டார்.

30.03.2023 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதல் ஆட்சிக் பேரவைக் குழு கூட்டத்தில் (Senate Members Meeting) முனைவர். சி.கோபி கலந்து கொண்டார்.

11.04.2023 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் பல்கலைக்கழக தேர்வு ஏப்ரல் - 2023 (செமஸ்டர் தேர்வுக்கான) தேர்வுக்கான தேதிகளை முடிவு செய்யும் கூட்டத்தில் தாவரவியல் துறை பேராசிரியர் முனைவர்.சி.கோபி அவர்கள் கலந்து கொண்டார்.

## J. இயற்பியல் துறை: (Department of Physics)

இக்கல்வியாண்டில் இயற்பியல் துறையில் பணியாற்றும் துறைத்தலைவர் ஜி.ராஜ்மோகன் மற்றும் உதவிப்பேராசிரியர் திருமதி.அ.சுபலெட்சமி அவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள்.

முனைவர்.ஜி.ராஜ்மோகன் அவர்கள் Elesivier (Compturtional and Theoritical chemistry) இதழில் தனது ஆய்வு கட்டுரையை வெளியிட்டுள்ளார்.

ஜனவரி 12, 13, 2023 ஆம் தேதியில் இயற்பியல் துறை சார்பாக ‘Recent Trends in Solar Cells” என்ற தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக முனைவர்.என்.வாசிமலை, முனைவர். P.சதீஸ்குமார், முனைவர்.K.சக்தி பாண்டி, முனைவர்.C.கோபிநாதன், முனைவர்.M.ஜெகநாதன், முனைவர்.G.இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சோலார் மின்கலம் தயாரிப்பு மற்றும் பயன்பாடுகளை பற்றி சிறப்புரை ஆற்றினார்கள். இக்கருத்தரங்கு ஏற்பாடுகளை முனைவர்.ஜி.ராஜ்மோகன் துறைத்தலைவர் அவர்கள், TNSCST மூலம் உதவிதொகை ரூ.15000 பெற்று நடத்தியுள்ளார்.

இக்கருத்தரங்கில் பல்வேறு கல்லூரி, பல்கலைகழக மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆய்வறிக்கைகளை சமர்பித்துள்ளார்கள்.

இயற்பியல்துறையின் சார்பாக முந்தலில் அரசு ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களக்கு , அறிவியல் அறிவு மேம்படுத்துவதற்காக

ஒரு நாள் அறிவியல் விழிப்புணர்வு முகாம் செய்முறைப் பயிற்சியின் வாயிலாக 09.11.2022 அன்று நடைபெற்றது. இதில் இரண்டாம் ஆண்டு பயிலும் வேதியியல், கணிதத்துறை மாணவர்கள் கலந்து கொண்டு செயல்முறை விளக்கம் மூலம் அறிவியல் பாடத்தை விளக்கி காண்பித்தனர். இந்நிகழ்வு மாணவ, மாணவியர்களிடையே அறிவியல் மீதான ஆர்வத்தையும், அறிவியல் மனப்பான்மையையும், அறிவியல் அறிவை வளர்த்துக் கொள்ளவும் இம்முகாம் மாணவ, மாணவியர்களுக்கு பெரும் பங்கி வகித்தது.

## K. இளங்கலை வணிக நிர்வாகவியல் துறை (சுயநிதிப்பிரிவு) (BBA Department)

11.08.2022 முதல் 14.08.2022 வரை நமது கல்லூரியின் வரலாற்று துறை சார்பாக இணையவழி வினாடி வினா Indian National Movement என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில் பேராசிரியர் திரு.கா.பரத்ராஜா அவர்கள் வெற்றி பெற்று சான்றிதழ் பெற்றுள்ளார்.

12.10.2022 அன்று வணிகநிர்வாகவியல் துறை மற்றும் வணிகவியல் (சுயநிதிப் பிரிவு) துறை இணைந்து ‘Overview of Securities Market & Importance of Demat” என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

01.12.2022 அன்று தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வி இயக்கம் ”கலைத்திருவிழா” என்ற தலைப்பில் Block Resource Centre, Bodinayakanur நடத்தியது. இதில் நடுவராக நமது பேராசிரியர் திரு.பி.ஜெகதீஸ் அவர்கள் செயல்பட்டார்.

06.01.2023 அன்று மதுரை தியாகராஜர் கல்லூரியின் வணிகவியல்துறை சார்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் நமது துறை மாணவர்கள் லோகநாயகி, ஹேமலதா, மோகன வம்சிதா, தவ்சிபா, கீர்த்திக்கா, சௌமியா, மாரிஸ்வரன் மற்றும் விஸ்வா ராமர் ஆகியோர்கள் AD2AP என்ற போட்டிகளில் இரண்டாம் பரிசு பெற்றார்கள்.

12.01.2023 அன்று நமது கல்லூரியின் வணிகநிர்வாகவியல் துறை மற்றும் ICI Theni Honey Bee என்ற அமைப்பும் இணைந்து உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு “போதை விழிப்புணர்வு” கருத்தரங்கை மாணவர்களுக்காக நடத்தினார்கள்.

01.02.2023 அன்று “மத்திய பட்ஜெட் 2023” வணிகவியல் துறை மாணவர்களுக்கு நேரடி ஒளிபரப்பு செய்து அதைப் பற்றிய விளக்கங்களும் அளிக்கப்பட்டது.

01.03.2023 முதல் 04.03.2023 வரை மைசூர் கூர்க் மற்றும் சிக்மங்களூர் ஆகிய இடங்களுக்கு கல்விச் சுற்றுலா சென்று வந்தனர். இதில் மைசூரில் உள்ள JK டயர்ஸ் மற்றும் கர்நாடக சோப்ஸ் & டிடர்ஜென்ட் தயாரிக்கும் நிறுவனங்களின் செயல்பாடு மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

## l. முதுநிலை வணிகவியல் துறை (சுயநிதிப்பிரிவு) (Department of Commerce – SF)

வணிகவியல்துறையும், மேலாண்மை நிர்வாகத்துறையும் இணைந்து பங்கு சந்தை பற்றி 12.10.2022 அன்று புதிய கருத்தரங்கு கட்டிடத்தில் மாணவர்களுக்கு விழப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக நிகழ்ச்சி நடைபெற்றது

வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஜி.ராஜேஷ் அவர்கள் Labour Law என்ற புத்தகத்தினை Shanlax Publication மூலம் அச்சிட்டு வெளியீட்டுள்ளளார்.

வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஜி.ராஜேஷ் அவர்கள் பல்கலைகழக மானிய குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நாளேட்டில் தனது ஆய்வுத்துறை சார்ந்த கட்டுரையை எழுதி வெளியீட்டுள்ளார். (Institutional Credit to Agriculture secter in Theni District – Raja mani Publication //ISBN : No : 978-81-9539/24-8-3)

முதலாமாண்டு வணிகவியல் துறை மாணவர் எம்.சுந்தரபாண்டி தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை (13.02.2023) விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டு 400மீட்டர், 200மீட்டர், 100 மீட்டர்-ல் முதல் பரிசும் ரொக்க பரிசாக ரூ.12000/-ம் பெற்றார்.

முதலாமாண்டு வணிகவியல் துறை மாணவர் கே.மணிமாறன், சிலம்பாட்ட போட்டியில் இரட்டைச் சிலம்பம், அலங்கார சிலம்பு விளையாட்டு, மான் கொம்பு விளையாட்டில் மூன்றாம் இடம் பெற்றுள்ளார்.

தேனி மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சிச் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சுற்றுலாத்துறை சார்பான 16.07.2022 அன்று நடைபெற்ற ஓவியப் போட்டியில் எமதுத் துறை மாணவி வைஷ்ணவி மற்றும் திவ்யா ஆகியோர் கலந்து கொண்டு பரிசகள் பெற்றனர்.

## M. கணினிப்பயன்பாட்டு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை :

## (BCA & B.Sc (IT) Department)

13.09.2022 ஆம் தேதி கணினிப்பயன்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை சார்பாக ‘International Programmer’s Day” சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நமது கல்லூரியின் முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் Significance of software testing என்ற தலைப்பிலும் கணிப்பொறி அறிவியல் துறைத் தலைவர் முனைவர்.கே.மாடசாமி அவர்கள் Coding standards in Best Practies என்ற தலைப்பிலும், முனைவர்.ஆர்.முருகேசன் அவர்கள் Debugging skills என்ற தலைப்பிலும், முனைவர்.கே.நித்தியானந்தகுமாரி அவர்கள் Trends in Programming Langauge என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள். துறைப்பேராசிரியர்கள் பாண்டிச் செல்வி மற்றும் மதுமலர் ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள்.

20.10.2022 அன்று பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடைபெற்ற "IT GALAXY 23" போட்டியில் தொழில்நுட்பத் துறை மாணவர்கள் ஜி.கண்ணன், கே.கோபிகிருஷ்ணன், எஸ்.வேலு நகார்ஜீன் அவர்கள் "Short film making" என்ற போட்டியில் முதல் பரிசும், வீ.வீரராஜேஸ் "Software Development" என்ற போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளனார்.

20.10.2022 அன்று ஸ்ரீ ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற "CAPTCHA – 22" மாணவர்கள் பூஜாரராணி, ஹரிதா "FACE PAINTING" என்ற போட்டியில் முதல் பரிசும், பூஜாரராணி "Adopt tune" என்ற போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளனார்.

07.10.2022 அன்று துறை சார்பாக "Android App Development using Kofwin" என்ற தலைப்பில் ஒரு நாள் பட்டறை நிகழ்வு நடைபெற்றது. இதில் K.அனுப்பிரியன், Trainer, Live wire, Chennai அவர்கள் சிறப்புரையாற்றினார்.

26.10.2022 அன்று துறை சார்பாக "Awareness Programme on Career Opportunities in IT Sector" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் M.சுகந்த குமார், Senior Manager, Digital Marketing, Chennai அவர்கள் "Industry Trends" என்ற தலைப்பிலும் திருமதி.ஜெயந்தி, Zotto Corp, Chennai அவர்கள் "Zotto approach to the industry" என்ற தலைப்பிலும் சிறப்பரையாற்றினார்கள்.

## N. ஆங்கிலத் துறை (சுயநிதிப்பிரிவு) (Department of English – SF)

Phoenix Literary Association inauguration 2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி D.விமலா, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை. பேராசிரியர் அவர்கள் மாணவர்களுக்கு 'Careers in English Literature" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

ஆங்கிலத்துறை மாணவர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 23.08.2022 அன்று Shakespeare-ன்"Macbeth" என்ற நாடகத்தை காண்பதற்காக சென்று வந்தனர்.

## O. இயற்பியல் துறை (SF)

இயற்பியல் துறை பேராசிரியர்கள் முனைவர்.ச.கார்த்திகாராணி மற்றும் திருமதி.தி.பாண்டிமீனா இருவரும் 2023 பிப்ரவரி 15,16 ஆகிய இரு நாட்கள் மதுரை மாவட்டம் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியில் நடைபெற்ற International conference on 'Expanding Frontiers in Chemistry", " Structural Properties and Photocatalytic degradation efficiency of CuO and Erropium doped Cuo NPs

preparted by Co-precipitation method using pepper extract" என்ற தலைப்பில் paper presentation செய்துள்ளனர்.

**P. வேதியியல் துறை (SF)**

முனைவர்.B.கவிதா, உதவிப்பேராசிரியர் அவர்கள் South korea-வில் உள்ள Yeungnam university ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து தனது ஆய்வுக் கட்டுரையை Web of science மற்றும் Scopus index Journal-ல் வெளியிட்டுள்ளார்.

முனைவர்.B.கவிதா, உதவிப்பேராசிரியர் அவர்கள் தனது மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை International Peer reviewed Scopus index Journal-ல் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியின் பேராசிரியையுடன் இணைந்து Nano fiber coated lab table-க்கு Design Patent பெற்றுள்ளார்.

முதுநிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் அனைவரும் நமது கல்லூரியில் ஜனவரி 12 மற்றும் 13 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற International Conference on Recent Trends in solar Cell-ல் கலந்து கொண்டனர். அதில் நான்கு மாணவர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்பித்தனார். இதில் சு.மணிகண்டன் என்ற இரண்டாமாண்டு மாணவர் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைக்கான பரிசினைப் பெற்றார்.

முதுநிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் 7 பேர் கருமாத்தூர் அருள் ஆனந்தா கல்லூரியில் இயற்பியல் துறை சார்பாக மார்ச் 9 மற்றும் 10 ஆகிய இரண்டு நாட்களில் நடத்தப்பட்ட International Conference on Recent Trends in Material Science-ல் கலந்து கொண்டனர். அதில் நான்கு மாணவர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்பித்தனார்.

முதுநிலை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஏழு மற்றும் இளங்நிலை இரண்டாமாண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் ஏப்ரல் -3 ஆம் தேதி திருவனந்தபுரம் கேரளாவில் உள்ள Vikram Sarabhai Space Centre-ISRO-விற்கு Industrial Visit சென்று வந்துள்ளனர்.

**Q. கணிதவியல் துறை (SF)**

நமது கல்லூரியில் சுயநிதிப்பிரிவு கணிதத்துறையில் பணிபுரியும் முனைவர்.R.நாகேந்திரன் மற்றும் முனைவர் R.லதா அவர்கள் எழுதிய "ADVANCED MATHEMATICS FOR CIVIL ENGINEERING" என்ற கணிதப் புத்தகம் 08.08.2022 அன்று தென்காசியில் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது.

முனைவர்.ஆர்.நாகேந்திரன் மற்றும் முனைவர்.ஆர்.லதா அவர்கள் வேல் டெக்மல்டி டெக் இன்ஜினியரிங் கல்லூரியில் 10.10.2022 முதல் 15.10.2022 வரை நடைபெற்ற One week national level faculty development programme on “Recent Research Area and the Applications of Mathematics” கருந்தரங்கில் கலந்து கொண்டனர்.

ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரியில் 03.03.2023 அன்று கணிதத்துறை சார்பாக தேசிய அளவில் “Recent Trends in Graphs and Networks in Digital World” என்ற தலைப்பில் நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் கணிதத்துறை பேராசிரியை திருமதி.ம.பூச்செல்வி அவர்கள் கலந்து கொண்டார்.

**R. வரலாற்றுத் துறை (SF)**

10.02.2023 தேனி மாவட்டம் வீரபாண்டி, தேனி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த தேனி கல்லூரிகளுக்கு இடையே “Evolution of the constitution of India & Research Methodology in History” என்ற தலைப்பில் ஒரு நாள் கருந்தரங்கம் நடைபெற்றது அதில் வரலாற்றுத்துறை பேராசிரியர் திருமதி.ஜெ.ஜின்சி, மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

17.03.2023 அன்று வரலாற்றுத்துறை மாணவர்கள் கள விஜயமாக கொங்கர் புளியங்குளம், திருமலை நாயக்கர் மகால், திருப்பரங்குன்றம் மற்றும் கீழடி ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தனர்.

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர்.எம்.கனகரஜ் அவர்கள் அக்டோபர் 2022 மேலூர்அரசு கலைக் கல்லூரி, தமிழ் உயராய்வு மையம் நடத்திய பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு “Genesis of forts in Tamil Nadu A Historical Glance” என்ற தலைப்பிலான கட்டுரையை சமர்ப்பித்துள்ளார்.

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் முனைவர்.எம்.கனகராஜ் அவர்கள் 19.01.2023-ல் தேனி, வடபுதுப்பட்டி, நாடார் சரசுவதி மகளிர் கல்லூரி வரலாற்றத்துறை நடத்திய “Writing and Reading of Inscriptions” என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரையை மாணவியரிடையே வழங்கினார்.

வரலாற்றுத்துறை பேராசிரியர் முனைவர்.எம்.கனகரஜ் அவர்கள் 03.11.2022-ல் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம் மற்றும் ஆக்ஸியம் கல்லூரி, வேலூர் இணைந்து நடத்திய “Memoralise the sacrifices of the Patriots to Trial

Through the 75 years of Stronger India” என்ற இணைய வழியிலான தேசியக் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

10.11.2022 அன்று இந்திய வணிக வரித்துறை மற்றும் ஜீ விழிப்புணர்வு அமைப்பும் இணைந்து நடத்திய "நடுகற்கள்" என்ற தலைப்பிலான இணையவழி கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

**S. தமிழ்த்துறை (SF)**

தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவின் சார்பில் மகாகவி பாரதியார் நினைவுநாள் கருத்தரங்கம் "பல்நோக்கு பார்வையில் பாரதி" என்ற தலைப்பில் 12.09.2022 திங்கட்கிழமை அன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக புலவர் ச.இளங்குமரன், நிறுவனர், வையைத் தமிழ்ச்சங்கம், தேனி, அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

துறைத்தலைவர் திரு.நா.பால்பாண்டி அவர்கள் சிற்பி "பாலசுப்பிரமணியம் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையையும், திருமதி.சே.மாசிலாமணி அவர்கள் ”இலக்கியமும் அறிவியலும்” என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையையும், திரு.ம.பாபு அவர்கள் "சங்க இலக்கியத்தில் செம்மொழிக்கூறுகள" என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

திரு.நா.பால்பாண்டி அவர்கள் தனது முனைவர் பட்ட ஆய்வேட்டினை சமர்ப்பித்துள்ளார்.

திருமதி.பா.அங்கயற்கண்ணி தனது முனைவர் பட்ட வாய்மொழித்தேர்வினை (Viva-voce) மேற்கொண்டுள்ளார்.

திருமதி.சே.மாசிலாமணி தனது முனைவர் பட்ட ஆய்வினை பதிவு செயதுள்ளார். மேலும் UGC நடத்திய பேராசிரியர்களுக்கான தகுதிதேர்வில் (NET) தேர்ச்சி அடைந்துள்ளார்.

**T. தாவரவியல் துறை: (Department of Botany)**

25.06.2022 அன்று கள ஆய்விற்காக கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயத்திற்கு தாவரவியல்துறை மாணவர்கள் சென்று வந்தனர்.

வி.வி.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரியில் 28.10.2022 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர்.அ.மோகன்ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "போன்சாய் மரங்கள் வளர்ப்பு" பற்றியும் அதன் பராமரிப்பு பற்றியும் சிறப்புரையாற்றினார்.

12.02.23 அன்று கரூர் மாவட்டத்தில் உள்ள ரெங்கமழலை காப்புக் காடுகளில் உள்ள மருத்துவத் தாவரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நான் முதல்வர் திட்டத்தின் கீழ் ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் (FDP) என்ற நிகழ்வானது மதுரை காமரசர் பல்கலைக்கழகத்தில் 06.02.2023 முதல் 10.02.2023 வரை நடைபெற்றது. இதில் தாவரவியல்துறைத் தலைவர் முனைவர்.அ.மோகன்ராஜ் அவர்கள் கலந்து கொண்டார்.

16.03.2023 மற்றும் 17.03.2023 ஆகிய இரண்டு நாட்கள் தாவரவியல் துறை மாணவர்கள் கொடைக்கானல் வன உயிரினச் சரணாலயத்திற்கு கல்விச் சுற்றுலாசென்றனர். அங்கு பல்வேறு தாவர மற்றும் விலங்குகளை கண்டனர். இதன் மூலம் இயற்கையை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டது.

## 11. அரசு உதவித்தொகை:-

நமது கல்லூரி இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு அரசுத்துறைகளின் மூலம் வழங்கப்படும் அனைத்து கல்விஉதவித்தொகையும் இந்த கல்வி ஆண்டு முதல் இணையவழியில் விண்ணப்பங்கள் ஏற்றப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் உதவித்தொகையாக ரூ.74,65,227/- 439 மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை மூலம் **169** மாணவ மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை பெற்று பயன் அடைந்து உள்ளனர்.

SC/ ST Higher Education Special Scholarship **15** மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 12. கற்பிக்கப்படும் பாடங்களும் மாணவர்களின் எண்ணிக்கை :

நமது கல்லூரியில் இளநிலைப் பட்டவகுப்பில் வரலாறு, பொருளியல், ஆங்கிலம், கணிதம், வேதியியல், கணினி மற்றும் வணிகவியல் (கணினி பயன்பாடு) பாடங்களும் முதுநிலையில் கணிதம், வேதியியல், ஆங்கிலம் மற்றும் வணிகவியல் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. வேதியியல்துறை, கணிதத்துறை, வணிகவியல்துறை, கணினி அறிவியல்துறை பல்கலைக்கழகத்தால் ஆராய்ச்சி மையமாக அங்கீகரிக்கப்பட்டு M.Phil., மற்றும் Ph.D., ஆய்வுப் பணிகள் நடந்தேறி வருகின்றன

சுயநிதிப்பிரிவின் கீழ் இளநிலைப்பட்ட வகுப்பில் B.C.A., B.Sc., (IT), B.B.A., B.Com (CA), B.A., Tamil, English, B.Sc(Physics), B.Sc(Maths), B.Sc (Botany) முதுநிலையில் M.Sc., CS, M.Sc., Chemistry, M.A., English, M.Com (CA), M.A (History) M.Phil., Chemistry, ,M.Phil., Maths, M.Phil.,Commerce, M.Phil, English, M.Phil,

Computer Science Ph.D.,Maths, Ph.D.,Chemistry, Ph.D.,Commerce பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

அரசு உதவி பெறும் பிரிவுகளில் 914 மாணவ, மாணவியர்களும் சுயநிதிப் பிரிவுகளில் 664 மாணவ, மாணவியர்களும் ஆக மொத்தம் 1578 பேர் பயிலுகின்றனர்.

காந்தியச் சிந்தனை சான்றிதழுக்குரிய பாடமாகவும் (CGT) மற்றும் பட்டய பாடமாகவும் (DGT) கணினிப் பயன்பாடு இளநிலை (DCA) மற்றும் முதுநிலை (PGDCA) பட்டயப் பாடங்களாகவும் கற்பிக்கப் படுகின்றன.

வேதியியல் மற்றும் வணிகவியல் துறையில் சான்றிதழ் மற்றும் பட்டய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

## 13. ஆசிரியர், அலுவலர்கள் எண்ணிக்கை:

நம் கல்லூரியில் அரசு உதவிப்பெறும் பிரிவுகளில் **52** பேராசிரியர்களும், **23** அலுவலர்களும், சுயநிதிப்பிரிவில் **50** பேராசிரியர்களும், **37** அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

இக்கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்கள் 42 பேர் முனைவர் பட்டம் பெற்றவர்கள். மீதமுள்ள அனைவரும் M.Phil./SET/NET படிப்பு முடித்து, Ph.D.,க்காக ஆய்வுப்பணியினை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

## 14. புதிய பேராசிரியர்கள் நியமனம் :

தமிழக அரசு கல்வித்துறை அனுமதி அளித்து அரசு மானியத்துடன் கூடிய உதவிப்பேராசிரியர்கள் தமிழ்த்துறை - 1 பொருளியல்துறை - 1 கணிதத்துறை - 4 வேதியியல்துறை - 1 வணிகவியல்துறையில் - 1 முறையே 8 பேராசிரியர்கள் இந்த கல்வியாண்டில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## 15. கல்லூரித் தேர்வுகள்:

உயர் கல்வியில் பின் தங்கியுள்ள நமது பகுதியைச் சார்ந்த மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்த்த இக்கல்லூரி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆசிரியர்களின் சீரிய முயற்சியினாலும் மாணவர்களின் கடின உழைப்பினாலும் இந்த கல்வியாண்டில் நடந்து முடிந்த பல்கலைக்கழக தேர்வுகளில் ஒரு சில பாடங்களைத் தவிர மற்ற அனைத்துப் பாடங்களிலும் 80 சதவீதத்திற்கு மேல் மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

நமது கல்லூரியில் **CBCS** என்றும் திட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் **உள்மதிப்பீடு தேர்வுகளின் ஒருங்கிணைப்பாளராக (Co-ordinator for InternalExams)**

**Dr. K. நித்தியானந்தகுமாரி, உதவிப்பேராசிரியர் கணிப்பொறி அறிவியல்துறை அவர்கள் திறம்பட செயல்பட்டு வருகிறார்.**

## 16.மாணாக்கர் மேம்பாட்டுத்திட்டங்கள்:

**a. காந்திய சிந்தனைக் கல்வி (CGT/DGT) :**

காந்திய சிந்தனைச் சான்றிதழ் மற்றும் பட்டயப் பாடத்தில் வருடம் தவறாமல் மாணவ, மாணவியர்கள் தேர்வெழுதி வெற்றி பெற்று வருகின்றனர். இக்கல்வியாண்டிலும் சான்றிதழ் மற்றும் பட்டயப் பாடத்தில் 12 மாணவர்கள் தேர்வு எழுத உள்ளனர். இம்மையத்தின் **ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை முனைவர்.அ.சுஜாதா அவர்கள் பணியாற்றி வருகின்றார்.**

**b. நாட்டுநலப் பணித்திட்டம் : (N.S.S)**

28.07.2022 மற்றும் 29.07.2022 அன்று நமது கல்லூரியில் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது. அதில் 357 மாணவ, மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தார்கள்.

11.08.2022 அன்று நமது நாட்டு நலப்பணித்திட்ட அணி சார்பாக போதைப்பொருள் தடுப்புப் பேரணி மற்றம் அதன் தலைப்பில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. 15.08.2022 அன்று 75வது சுதந்திரதின விழா கொண்டாடப்பட்டது. அதனை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் மிக சிறப்பாக நடைபெற்றது. 23.08.2022 அன்று கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது. அதில் 115 மாணவ, மாணவியர்கள் மற்றும் பேரசிரியர்கள் பயன அடைந்தார்கள்.

17.10.2022 அன்று இளைஞர்கள் எழுச்சி தினத்தை முன்னிட்டு கணிதவியல் துறைத்தலைவர் முனைவர்.அ.மகேஸ்வரன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

18.10.2022 அன்று தீ பாதுகாப்பு நடவடிக்கைளை அறிய தேனி மாவட்ட தீயணைப்புத் துறை அதிகாரி திரு.P.கல்யாண்குமார் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு செயல்முறை விளக்கம் வழங்கினார். 27.10.2022 அன்று நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் மூலம் வளாகத்தை சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

07.01.202, 08.11.2022 மற்றும் 10.11.2022 அன்று 200 மரக்கன்றுகள் நமது கல்லூரி வளாகத்தில் நடப்பட்டது.

26.01.2023 அன்று குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

21.02.2023 அன்று ஆட்சி வட்டார மொழி வார விழாவை முன்னிட்டு தேனியில் நடைபெற்ற பேரணியில் நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

31.03.2023 அன்று போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தின் சார்பாக தூய்மை திருவிழா தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்று பரிசினை பெற்றனர்.

27.02.2023 அன்று நமது கல்லூரியில் பெரியகுளம் தாலூகாவில் உள்ள பள்ளிகளிலிருந்து 88 மாணவர்களுக்கும் மற்றும் 23 பள்ளி ஆசிரியர்களுக்கும் "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் உயர்கல்வி வழிகாட்டுகதல் மற்றும் கல்லூரி களப்பயணம் நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்களுக்கு அனைத்து துறை பற்றியும் விவரிக்கப்பட்டது.

நாட்டு நலப்பணித்திட்ட ஏழு நாள் சிறப்பு முகாம் 24.03.2023 முதல் 30.03.2023 வரை குரங்கனி, கொட்டக்குடி, சோலையூர், நரிப்பட்டி, முதுவாக்குடி, முந்தல் ஆகிய இடங்களில் முகாமிட்டு பல்வேறு களப்பணிகளை மேற்கொண்டனர். அதில் நெகிழி ஒழிப்புப் பேரணி, தூய்மைப்பணி, கலை விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் சுமார் 30 பேராசரியர்கள் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் சிறப்புரை ஆற்றினர் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பயிற்சிகளை வழங்கினர்.

## 17. ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழகம்:

நமது கல்லூரியில் "ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழகம்" பாடத்தில் 29 மாணவ, மாணவியர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர். உலக யோகா தினம் 21.06.2023 அன்று நமது கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர் கே.சிவா அவர்கள் தலைமையில் அனைவருக்கும் யோகாசன பயிற்சி அளிக்கப்பட்டது. **ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழக ஒருங்கிணைப்பாளராக முனைவர்.அ.மகேஸ்வரன் அவர்கள் சிறப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.**

## 18. மனித உரிமைகள் கழகம் (Human Rights)

27.03.2023 அன்று "HUMAN RIGHTS" சார்பாக இக்குழுவில் உள்ள உறுப்பின மாணவ, மாணவியருக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் புதிய கருத்தரங்கு அரங்கில் நடைபெற்றது. இதில் 40 மாணவ உறுப்பினர்கள் பங்கேற்றனர். "HUMAN RIGHTS CULB" ஒருங்கினைப்பாளராக வணிகவியல் துறை உதவிப்பேராசிரியர் Dr.K.வனிதீஸ்வரி அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 19. நுகர்வோர் மன்றம் (Consumer Club)

நுகர்வோர் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக **முனைவர்.D.ஹேமா** உதவிப்பேராசிரியர், பொருளியல்துறை, ஏ.வி.ச.கல்லூரி அவர்கள் செயல்பட்டு வருகிறார். பாரம்பரிய உணவுத் திருவிழா - குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம், போடிநாயக்கனூர், மக்கள் இயக்கம் சார்பாக நமது கல்லூரியில் 18.10.2022 நடத்தப்பட்டது. இதில் 100க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டடனர். மேலும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. அதில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

தேனி மாவட்டத்தில் 2022-2023 ஆம் ஆண்டு நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழாவினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நுகர்வோர் தின விழா கொண்டாடப்பட்டது. "இன்றைய நுகர்வு கலாச்சாரத்தின் தாக்கம்" என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. அதில் நமது கல்லூரி நுகர்வோர் மன்றம் சார்பாக வணிகவியல்துறை மாணவி பவித்ரா பங்கு பெற்றார்.

## 20. Equal Opportunity Cell

நமது கல்லூரி பல்கலைக்கழக மானியக்குழு ஒப்புதலுடன் Equal Opportunity Cell 20.07.2012 முதல் இயங்கி வருகிறது. இதனுடயை ஒருங்கிணைப்பாளராக **முனைவர். G. தங்கதுரை** வணிகவியல்துறை உதவிப்பேராசிரியர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இந்த அமைப்பு அவ்வப்பொழுது மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து வருகிறது. இவ்வமைப்பின் ஆலோசனை குழுத் தலைவராக கல்லூரி முதல்வர் (பொறுப்பு) Dr. S. சிவக்குமார் இருந்து வருகிறார்.

## 21. Youth Red Cross (YRC) & Red Ribbon Club (RRC)

25.08.2022 அன்று நமது கல்லூரியில் செஞ்சிலுவை சங்கம், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், லயன்ஸ் கிளப் மற்றும் பெரியகுளம் அரசு மருத்துவமனை இணைந்து நடத்திய இரத்ததான முகாமில் சுமார் 100 மாணவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர். மேலும் போடிநாயக்கனூர் சித்ரா கண்ணாடியகமும் நமது கல்லூரி செஞ்சுருள் சங்கமும் இணைந்து நடத்திய கண் பரிசோதனை முகாமில் மாணவ, மாணவியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து பயன்அடைந்தனார். மேலும் கல்லூரி தலைவர்.திரு.எஸ்.வி.சுப்பிரமணியன், உப-தலைவர் திரு.எஸ்.இராமநாதன், செயலாளர் திரு.ஆர்.புருஷோத்தமன், முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் மற்றும் போடி அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவர் ரவீந்திரநாத் ஆகியோர் இரத்ததான முகாமில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜீன் 23,2022 அன்று செஞ்சுருள் சங்கம் சார்பாக கல்லூரியில் உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மாதந்தோறும் இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் ஆறு மாதத்ததிற்கு ஒரு முறை ALBENDAZOLE மாத்திரைகளும் வழங்கப்படுகிறது. இதன் ஒருங்கிணைப்பாளராக கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.வி.ஹேமலதா அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 22.மாற்றுத் திறனாளிகள் (திவ்யஜன) நலத்திட்டம் :

இந்த திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல் துறை பேராசிரியர் இ.பாப்புலட்சுமி செயல்பட்டு வருகிறார்.

திவ்யஜன் நலத்திட்டம் நடப்பு கல்வி ஆண்டில் நமது கல்லூரியில் உள்ள மாற்று திறனாளி மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் 15.02.2023 அன்று “Awarenss Programme for Differently abled Students” என்ற தலைப்பில் நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. இதில் நமது கல்லூரியில் உள்ள மாற்றுத் திறனாளி மாணவர்கள் 8 நபர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக திரு.V.ஆனந்த், M.A., B.Ed., Special Educator, BRC, Aundipatti அவர்கள் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் உதவி திட்டங்கள் பற்றியும் மற்றும் அவர்களின் எதிர்கால கனவை ஊக்குவிக்கும் வகையிலும் அறிவுரைகளை வழங்கினார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார், திவ்யஜன்நலத்திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி.இ.பாப்புலட்சுமி மற்றும் திரு.எஸ்.சேதுராமன் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை வெற்றிகரமாக நடத்தினர்.

மேலும் இந்த கல்வி ஆண்டிற்குள் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் Wheel chair மற்றும் walking stick வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## 23. Swayam/MOOC’s Course

முனைவர்.அ.சுஜாதா அவர்கள் Swayam Course-ல் Business Statistics என்ற பாடத்தைப் படித்து உள்மதிப்பீடு அனைத்தையும் முடித்து External Exmaination-க்கு தயராகி வருகிறார்.

## 24. Language and Communication Skills Club :

இக்கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.சி.பழனிவேல்ராஜன் மற்றும் முனைவர்.எம்.சுமையாபானு ஆகியோர் செயல்பட்டு வருகிறார்கள்.

## 25. அறிவியல் தகவல் தொடர்பு கழகம் :

அறிவியல் தகவல் தொடர்புக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக முனைவர்.அ.சுபலட்சுமி அவர்கள் பணியாற்றுகிறார். 2022-23-ம் கல்வியாண்டில் மாணவ, மாணவியர்களுக்கு அறிவியல் அறிவை மேம்படுத்துவதற்காக அறிவியல் விழிப்புணர்வு முகாம், அரசு நடுநிலைப்பள்ளி முந்தலில் நடைபெற்றது. இதில் 6-ஆம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை சுமார் 30 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். அறிவியல் கழக மாணவ, மாணவியர்கள் அறிவியல் பாடங்களை செயல்முறை விளக்கமாக பள்ளி மாணவர்களுக்கு விளக்கினர். இது அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அறிவியல் ஆர்வத்தை தூண்டும் விதமாகவும் இருந்தது. அறிவியல் தகவல் தொடர்பு கழக மாணவ, மாணவியர்களுக்கு இயற்பியல், வேதியியல், கணிப்பொறி அறிவியல், தாவரவியல் துறை சார்ந்த ஆய்வுகூடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு அறிவியல் மனப்பான்மையையும் அறிவியல் மீதான தனித்திறமையை வளர்த்து கொள்ளவும், அவைகளை வெளிக்கொணரவும், அறிவியல் அறிவை முழுமையாக பெறவும் அறிவியலின் உண்மையான ஆர்வத்தை கற்கவும் அறிவியல் தகவல் தொடர்பு மன்றம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

## 26. மகளிர் மையம் :

மகளிர் மையத்தின் சார்பாக 18.10.2022 அன்று பாரம்பரிய உணவுத் திருவிழா - 2022 நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.அ.சுபலட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். திட்டத்தின் விளக்க உரையை திருமதி.C.ராஜராஜேஸ்வரி, தேனி மாவட்ட திட்ட அலுவலர் அவர்கள் வழங்கினார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக திருமதி.A.S.சரண்யா, உணவு பாதுகாப்பு அலுவலர், போடிநாயக்கனூர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அதில் மாணவிகளுக்கு பராம்பரிய உணவை பற்றி சிறப்பாக எடுத்துரைத்து அதை உண்பதால் ஏற்படும் சிறப்பம்சங்கள் பற்றி கூறினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர்.வீ.ஹேமலதா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

நமது கல்லூரியில் 26.09.2022 முதல் 04.10.2022 வரை நவராத்திரி விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவின் தொடக்க நாளான்று கல்லூரித் தலைவர், உபதலைவர், செயலாளர் என அனைவரும் கலந்து கொண்டு விழாவினை தொடங்கி வைத்தனர். மேலும் கல்லூரியின் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் விழா நடைபெற்ற நாட்களில் அம்மனுக்கு உகந்த வண்ணங்களில் அலங்கரிக்கப்பட்டு தினந்தோறும் துறை வாரியாக பூஜைகளும், பிரசாதங்களும் படைக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு 08.03.2023 அன்று நமது கல்லூரியில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. கல்லூரி தலைவர், உபதலைவர், செயலாளர் மற்றும் தொடர்பாளர், கல்லூரி முதல்வர் அவர்களின் நல்ல வழிகாட்டுதலுடன் சிறப்பாக நடைபெற்றது. பெண்கள் நினைவாற்றலை முன் வைத்து பெண்மையின் பெருமையை பற்றி கல்லூரியின் செயலாளர் திரு.ஆர்.புருஷோத்தமன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். கல்லூரி நிர்வாகஸ்தர்கள் முனைவர். P.சிவபிரகாஷம், திரு.P.ராஜேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மகளிர் மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர்.அ.சுபலெட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். முனைவர்.வீ.ஹேமலதா அவர்கள் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தேனி அரசு மருத்துவக் கல்லூரி, தோல் மற்றும் தொழு நோயியல் துறைத்தலைவர் Dr.S.கார்த்திகா அவர்கள் பங்கேற்று பெண்களின் பன்முகத் திறமையைப் பற்றி சிறப்புரையாற்றினார். மாணவிகளுக்கு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. ஒருங்கிணைப்பாளர் முனைவர்.எஸ்.விஜயலெட்சமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## 27. ECO Club

நமது கல்லூரியில பயிலும் பல்வேறு துறையைச் சார்ந்த இரண்டாம் வருட மாணவ, மாணவியர்கள் இந்த Extension Activites - சுற்றுப்புறசூழல் பிரிவில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் எடுக்கப் பெற்று அதன் மூலம் அறிந்து கொண்டதை Assignment மற்றும் Projects மூலம் மாணவ, மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டதை மதிப்பீடு செய்யப்பட்டன.

## 28. பகடிவதை தடுப்பு சட்டம் (Anti Ragging Cell)

இம்மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக இயற்பியல்துறை உதவிப்பேராசிரியர் திரு.G.ராஜ்மோகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இதன் உறுப்பினர்களாக உடற்கல்வி இயக்குநர் முனைவர்.K.சிவா, உதவிப்பேராசிரியர் திருமதி.A.சுபலட்சுமி அவர்களும் மாணவ உறுப்பினர்களாக மூன்றாமாண்டு வேதியியல் P.கோபிநாத், மூன்றாமாண்டு வரலாறு சுபாஷ் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

பகடிவதைப் புகார் எண்கள் 1027, 1098 மற்றும் 18001805522 இணையதள முகவரி போன்ற விபரங்களை மாணவர்களுக்குத் தெரியும் வண்ணம் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளது. அரசு மனநல மருத்துவர்கள் அறிமுகம் செய்யப்பட்டு அவர்களின் தொலைபேசி எண்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மாணவர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளை கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 29. தொழில் முனைவோர் மையம் (EDC)

வரலாற்று சிறப்புமிக்க ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியில் தொழில் முனைவோர் மையம் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை பேராசிரியர் முனைவர். வீ. கிருஷ்ணகுமார் அவர்கள் செயல்பட்டு வருகிறார். நமது கல்லூரியின் தொழில் முனைவுத் திறனை மேம்படுத்தவும், அதனை கொண்டு அவர்கள் தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கு மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த கல்வியாண்டின் முதல் நிகழ்வாக மாணவ, மாணவிகளை தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தின் செயல்பாடுகள் மற்றும் தொழில் முனைவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரி முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 10.08.2022 முதல் 25.08.2022 வரையில் 15 நாட்கள் கல்லூரியில் அனைத்துத் துறைகளிலும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர்.வீ.கிருஷ்ணகுமார் அவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு அனைவருக்கும் விளக்கஉரை வழங்கினர். அதன் விளைவாக மாணவ, மாணவிகள் நிறைய பேர் தங்களை உறுப்பினர்களாக இணைத்து கொண்டனர்.

30.09.2022 ஆம் தேதி ஒரு நாள் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி மற்றும் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் 10க்கும் மேற்பட்ட பேரசிரியர்கள் மற்றும் 250க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

19.10.2022 ஆம் தேதி நமது கல்லூரியில் தமிழக அரசால் நடத்தப்பட்ட "Startup TN- Break the Barriers" என்ற நிகழ்வு நடத்தப்பட்டது. அதில் மாணவர்களுக்கு தொழில் முனைவில் உள்ள தடைகளை தகர்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்தனர். மேலும் அனைத்துத் துறை பேராசிரியர்களும் பங்கு பெற்றனர். இந்த நிகழ்வில் தமிழக அரசினை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு EDII-Hub இணைந்து நடத்திய EDC ஒருங்கிணைப்பாளர்களுக்கான மூன்று நாட்கள் (10.10.2022 முதல் 12.10.2022 வரை) நடைபெற்ற Faculty Development Programme-ல் நமது

கல்லூரியின் EDC ஒருங்கிணைப்பாளர் முனைவர்.வீ.கிருஷ்ணகுமார் அவர்கள் கலந்து கொண்டார்.

03.11.2022 மற்றும் 04.11.2022 ஆகிய இரண்டு நாட்கள் மதுரை காமராசர் பல்கலைககழத்தில் நடைபெற்ற “Design Thinking workshop for student member of EDC”-நிகழ்வில் நமது கல்லூரி வணிகவியல்தறை மூன்றாமாண்டு மாணவர்கள் திரு.எம்.சந்தோஷ்குமார் மற்றும் திரு.எம்.பெத்தணசாமி கலந்து கொண்டனார்.

15.02.2023 அன்று மதுரை டோக் சீமாட்டி கல்லூரியில் நடைபெற்ற Zonal level TNSDG Girls Championship – 2022 என்ற நிகழ்வில் மூன்றாமாண்டு வணிகவியல் துறையைச் சார்ந்த கே.வித்யா மற்றும் எம்.ரேசாந்தின் ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.

மேலும் நமது கல்லூரியின் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையமானது தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டு அதன் கிளை நிறுவனங்களான TNEDII – HUB மற்றும் TN Startup –ல் தன்னை இணைத்து விழிப்புணர்வை வழங்கி வருகிறது. இதன் பின் வரும்கால நிகழ்வாக பல நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இணைந்து பணியாற்ற முயற்சிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது.

## 30. தேசிய மாணவர் படை (NCC)

23.05.2022 முதல் 01.06.2022 வரை கும்பகோணம் கோவிலாச்சேரி அன்னை கல்லூரியில் நடைபெற்ற CATC CUM TSC IUC முகாமில் நம் கல்லூரி 8 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

05.06.2022 முதல் 14.06.2022 வரை காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட CATC /CUM /TSC/ TRG - 1 முகாமில் நம் கல்லூரி 9 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

30.06.2022 முதல் 09.07.2022 வரை கும்பகோணம் AVC கல்லூரி மன்னம்பந்தலில் நடத்தப்பட்ட CATC /CUM /TSC முகாமில் நம் கல்லூரி 8 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

12.07.2022 முதல் 21.07.2022 வரை தாம்பரத்தில் உள்ள மணிமங்கலத்தில் உள்ள தனலட்சுமி பொறியியல் கல்லூரியில் சென்னை பட்டாலியன் நடத்திய CATC /CUM /IGC/ TSC முகாமில் நம் கல்லூரி 1 தேசிய மாணவர் படை மாணவர் கலந்து கொண்டார்.

20.07.2022 முதல் 29.07.2022 வரை திண்டுக்கல் GTN கல்லூரியில் நடத்திய CATC CUM RDC Selection 1 முகாமில் நமது கல்லூரி 14 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

26.10.2022 முதல் 04.11.2022 வரை ஊட்டி வெல்ஸ்டனில் நடைபெற்ற All India Girls Trekking முகாமில் நமது தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

24.12.2022 முதல் 31.12.2022 வரை கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு பயிற்சி முகாமில் நமது கல்லூரி 16 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

18.01.2023 முதல் 25.01.2023 வரை பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு பயிற்சி முகாமில் நமது கல்லூரி 4 தேசிய மாணவர் படை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்கள் 20.03.2023 முதல் 29.03.2023 வரை செகந்திராபாத்தில் நடைபெற்ற ராணுவ இணைப்பு முகாமில் கலந்து கொண்டனார்.

## 31. முன்னாள் மாணவர் சங்கம்

ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இக்கல்வியாண்டில் 09.12.2021-ல் முன்னாள் மாணவர் சங்கம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பெரியகுளத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

இச்சங்கத்தின் தலைவராக தணிக்கையாளர் திரு.ஜெகதீசன், செயலராக முனைவர்.எஸ்.பாலமுருகன், பொருளராக முனைவர்.கே.கிருஷ்ணன் மற்றும் 13 நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்

16.04.2023 அன்று முன்னாள் மாணவர் சங்க காணொலி கூட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 19.04.2023 அன்றும் கல்லூரி வளாகத்தில் நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கல்லூரி வளர்ச்சிக்கும், மாணவர் நலனுக்கும் பலன் தரும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

முன்னாள் மாணவர் சங்கச் செயலராக கல்லூரியின் துணை முதல்வர் Dr.S.பாலமுருகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

## 32. உடற்கல்வித் துறை

நமது கல்லூரியில் உடற்கல்வித்துறை சார்பாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற C Zone போட்டியில் பல்வேறு குழுக்களாக டேபிள் டென்னிஸ், சதுங்கம், பூபந்து, கிரிக்கெட் மற்றும் கபடி உள்ளிட்ட போட்டிகளில் கலந்து கொண்டனர். 2022 - 2023ஆம் கல்வியாண்டிற்கான மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற C Zone போட்டியில் கால்பந்து, வாலிபால், கைபந்து

போன்ற போட்டிகளிலும் குழுக்களாக மாணவர்கள் பங்கு பெற்றனர். இதில் நம் கல்லூரி மாணவர்கள் மிகவும் பாராட்டத்தக்க பல சாதனைகளைச் செய்துள்ளனார்.

சதுரங்கம் :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக ‘C’ மண்டல அணிகளுக்கிடையே 10.10.2022 மற்றும் 11.10.2022 திண்டுக்கல் SSM கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் நம் கல்லூாரி ஆங்கிலத்துறையைச் சேர்ந்த மூன்றாமாண்டு மாணவர் K.சதீஸ்குமார் இரண்டாம் இடம் பிடித்து நமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்.

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக ‘Z’ மண்டல அணிகளுக்கிடையே 17.10.2022 முதல் 19.10.2022 வரை மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் நம் கல்லூாரி ஆங்கிலத்துறையைச் சேர்ந்த மூன்றாமாண்டு மாணவர் K.சதீஸ்குமார் ஏழாம் இடம் பிடித்தார்.

டேபிள் டென்னிஸ் :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக ‘C’ மண்டல அணிகளுக்கிடையே 10.10.2022 & 11.10.2022 அன்று திண்டுக்கல் SSM கல்லூரியில் நடைபெற்ற டேபிள் டென்னிஸ் போட்டியில் நம் கல்லூாரி மாணவர்கள் அரை இறுதிக்கு தகுதி பெற்றனர். மேலும் 18.10.2022 அன்று மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற Inter-zone டேபிள் டென்னிஸ் போட்டியில் நமது கல்லூரி மூன்றாமாண்டு வரலாற்றுத்துறை மாணவர் G.விக்ரம் Inter-zone தேர்வு செய்யப்பட்டார்.

கபடி :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக ‘C’ மண்டல அணிகளுக்கிடையே 19.10.2022 அன்று தேனி TKS கல்லூரியில் நடைபெற்ற கபடி போட்டியில் நம் கல்லூாரி கால்பந்து அணி வீரர்கள் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரி பெண்கள் அணி மதுரை காமராஜர் பல்கலைக்கழக ‘Inter Zone” போட்டி 03.11.2022 & 04.11.2022 விருதுநகர் வி.வி.வி.பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற கபடி போட்டியில் நம் கல்லூாரி கால்பந்து பெண்கள் அணி வீரர்கள் கலந்து கொண்டனர்.

கால் பந்து :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக ‘C’ மண்டல அணிகளுக்கிடையே 04.11.2022, 05.11.2022 அன்று திண்டுக்கல் ஜி.டி.என் கல்லூரியில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் நம் கல்லூாரி கால்பந்து அணி வீரர்கள் கலந்து கொண்டனார்.

பூப்பந்து :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 2.12.2022 அன்று திண்டுக்கல் ஜி.டி.என் கல்லூரியில் நடைபெற்ற பூப்பந்து போட்டியில் நம் கல்லூாரி வீரர்கள் கலந்து கொண்டனர். நமது கல்லூரி முதலாமாண்டு மாணவர் M.சிவபாலதேசரக்சன் Inter-zone தேர்வு செய்யப்பட்டார்.

நமது கல்லூரி பெண்கள் அணி மதுரை காமராஜர் பல்கலைக்கழக 'Inter Zone" போட்டி 17.10.2022 & 18.10.2022 விருதுநகர் VHNSN கல்லூரியில் நடைபெற்ற பூப்பந்து போட்டியில் நம் கல்லூாரி பெண்கள்அணி கலந்து கொண்டனர்.

கைப் பந்து :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 17.10.2022, 18.10.2022 அன்று சின்னமனூர் மதர் தெரசா கல்லூரியில் நடைபெற்ற கைப் பந்து போட்டியில் நம் கல்லூாரி கைப்பந்து வீரர்கள் கலந்து கொண்டனார்.

குத்து சண்டை :

நமது கல்லூரி ஆண்கள் அணி மற்றும் பெண்கள் அணி மதுரை காமராஜர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 29.10.2022, 30.10.2022 விருதுநகர் VHNSN கல்லூரியில் நடைபெற்ற நடைபெற்ற குத்து சண்டை போட்டியில் நம் கல்லூாரி வீரர்கள் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட் :

நமது கல்லூரி கிரிக்கெட் அணி மதுரை காமராஜர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 10.01.2023, 12.01.2023 உத்தமபாளையம் HKRH கல்லூரியில் நடைபெற்ற நடைபெற்ற போட்டியில் நம் கல்லூாரி வீரர்கள் கலந்து கொண்டனர்.

சிலம்பம் :

நமது கல்லூரி சிலம்ப வீரர் சி.சுரேந்தரபாண்டியன் Indo-Nepal Invitational International Championship Silambam நேபாலில் 26.12.2022 முதுல் 30.12.2022 வரை நடைபெற்றது அதில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது கல்லூரி சிலம்ப வீரர் கே.மணிமாறன் 02.12.2022 முதல் 05.12.2022 வரை கோவாவில் நடைபெற்ற $9^{th}$ National Youth games Championship அதில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தடகள போட்டி :

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக 'C' மண்டல அணிகளுக்கிடையே 14.12.2022 முதல் 15.12.2022 வரை எம்.ஜி.ஆர் அரங்கநத்தில் நடைபெற்ற தடகள போட்டியில் நம் கல்லூராரி வீரர்கள் கலந்து கொண்டனர்.

**33.கல்லூரி விளையாட்டு விழா :**

நமது கல்லூரி தலைவர் எஸ்.வி.சுப்பிரமணியன், உபதலைவர் திரு.எஸ்.இராமநாதன், கல்லூரி செயலாளர் திரு.ஆர்.புருஷோத்தமன் அவர்கள் முன்னிலையில் நமது கல்லூரியின் 49வது விளையாட்டு விழா நமது கல்லூரி மைதானத்தில் 24.03.2022 அன்று நடைபெற்றது. நமது கல்லூரியின் நிர்வாக குழு உறுப்பினர் திரு.P.நந்தகுமரன் அவர்கள் அவர்கள் கொடி அசைத்து விழாவினை துவக்கி வைத்தார் நமது கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.P.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றினார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் **போடி துணை காவல்துறை கண்காணிப்பாளர் உயர்திரு.P.பெரியசாமி அவர்கள்** பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார். கல்லூரி முதல்வர் முனைவர்.எஸ்.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். துணைமுதல்வர் முனைவர்.எஸ்.பாலமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். விளையாட்டுத்துறை இயக்குநர் முனைவர்.K.சிவா ஆண்டறிக்கையை வாசித்தார். இவ்விழாவில் நமது கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர்.

## 34. பொது நூலகம்

நமது கல்லூரி நூலகத்தில் மொத்தம் **28350** நூல்கள் உள்ளன. இவ்வாண்டு நமது கல்லூரி நூலகத்திற்கு நிர்வாகம் சார்பாக ரூ.11600/- மதிப்பிலான 77 புத்தகங்களும் ரூ.43900/- மதிப்பிலான 15 ஜோர்னல்ஸ் புதியதாக சந்தா கட்டப்பட்டுள்ளது.

மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் வகையில் (OPEN ACCESS SYSTEM) தாங்களே தெரிவு செய்து கொள்ளும் செயல்முறை பின்பற்றப்படுகிறது. கணினி முறையில் புத்தகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. தினசரி, வாரம், மாதம் ஒருமுறை, இருமுறை இதழ்களும் வாங்கப்படுகின்றன.

நூலக தினத்தை கொண்டாடும் வகையில் மாணவ, மாணவியர்களுக்கு கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, வினாடிவினா போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வகையில் நூலகத்தை பயன்படுத்தியமைக்காக Best Library user Award வழங்கப்படுகிறது.

நூலகத்தில் புத்தகக் கண்காட்சி 24.05.2022 முதல் 26.05.2022 வரை மூன்று நாட்கள் நடத்தப்பட்டன. இதில் பாரதி புத்தகலாயம் பதிப்பக புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

கல்லூரியை பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்ற நிகழ்வில் நமது கல்லூரி நூலகத்தை பார்வையிட வந்தனர். அவர்களுக்கு நூலகம் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.

## 35. தாத்தா பாட்டி குழு

நமது கல்லூரியில் தாத்தா பாட்டி மாணவர்க் குழு சார்பாக இந்த ஆண்டில் 2 நிகழ்வுகள் நடைபெற்றன. மதுரை காமராஜர் பல்கலைக் கழக பாடத்திட்ட அறிவுறுத்தலின்படி மாணவ, மாணவியர் இடையே தேசிய முதியோர் தினம் 11.09.2022 அன்று கொண்டாடும் விதமாகவும் மற்றும் தாத்தாப் பாட்டி முக்கியதுவத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு போட்டிகள் 13.09.2022 அன்று நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

20.10.2022 அன்று தாத்தா பாட்டி மாணவக் குழு சார்பில் கல்லூரி முதல்வர் அனுமதியுடன் கல்லூரி சார்பில் "கிராமியசங், அரசு முதியோர் இல்லம், இலட்சுமி நாயக்கன்பட்டி, தேனி அங்குள்ள முதியோருடன் சேர்ந்து தீபாவளி கொண்டாட 35 மாணவ, மாணவியர் மற்றும் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் திருமதி.இ.பாப்புலட்சுமி மற்றும் உறுப்பினர்கள் திரு.எஸ்.சேதுராமன் மற்றும் திருமதி.எஸ்.மாசிலாமணி ஆகியோர் சென்றனர். அங்கு முதியோர்களுடன் மாணவ, மாணவியர்கள் கலந்துரையாடி மகிழ்ந்தனர். பின்னர் மதிய உணவு நமது கல்லூரி சார்பில் வழங்கப்பட்டது. இறுதியாக அங்குள்ள தாத்தா, பாட்டியுடன் சேர்ந்து பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி தீபாவளியை கொண்டாடினர்.

## 36. Internal Complaints Committee (ICC)

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 4-ன் கீழ் நமது கல்லூரியில் உள் புகார்கள் குழு இயங்கி வருகிறது. பணிபுரியும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை தடுப்பதும், அப்பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் இக்குழுவின் நோக்கமாகும். இக்குழுவில் மொத்தம் 9 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 6 பேர் பெண் உறுப்பினர்களாவர். மீதம் 3 பேர் ஆண் உறுப்பினராவர். இவ்வுறுப்பினர்களைக் கொண்டு குழுவானது திறம்பட செயல்பட்டு வருகிறது.

## 37. E-content Development

நமது கல்லூரியின் E-content Development Centre-ன் ஒருங்கிணைப்பாளராக கணிணி அறிவியலத் துறை உதவிப்பேராசிரியை, முனைவர்.க.நித்தியானந்தகுமாரி, உள்ளார். அனைத்துப் பாடங்களிலும் E-content உருவாக்குவதை ஊக்குவித்தல், E-content உருவாக்கத்தில் ஆசிரியர்கள் மற்றம் நிபுணர்களுக்கு பல்வேறு வளங்களை உருவாக்குதால், பல்வேறு முறைகள் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு E-content-ஐ கிடைக்கச் செய்தல் இதன் நோக்கமாகும்.

## 38. விடுதிகள் :

2020-2021ஆம் கல்வியாண்டு முதல் நமது கல்லூரி விடுதித் துணைக்காப்பாளராக கணிப்பொறி அறிவியல் துறை, இணைப்பேராசிரியர் **முனைவர் R. முருகேசன்** அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

### மாணவர் விடுதி

மாணவர் விடுதியில் தற்போது 39 வெளியூர் மாணவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. மாணவர்களுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படுகின்றன. மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO) மற்றும் தினந்தோறும் தமிழ், ஆங்கில நாளிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. தொலைக்காட்சிப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள் போன்று மாணவர்களுக்குப் பல வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## 39. போக்குவரத்துத்துறை (Transport Department)

நமது கல்லூரியில் **ரூ.40 லட்சம்** மதிப்பிலான 8 பேருந்துகள் வாங்கப்பட்டு 19.09.2012 முதல் மாணவியர்கள் கல்லூரிக்கு வந்து செல்வதற்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும் மாணவியர்கள் சிரமமின்றி கல்லூரிக்கு வந்து செல்வதற்கு தேவாரம் வழி நாகலாபுரம் மற்றும் தேவாரம் வழி திம்மிநாய்கன் பட்டி, உப்புக்கோட்டை, மீனாட்சிபுரம் வழி அணைக்கரைபட்டி ஆகிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பேருந்துகளில் சுமார் 1000 மாணவியர்கள் தினந்தோறும் கல்லூரிக்கு வந்து பயன்பெறும் வகையில் இயக்கப்படுகிறது. மேலும் கல்லூரிகளுக்கு இடையே நடைபெறுகின்ற கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு விருப்பமுள்ள மாணவ, மாணவியர்களை நமது கல்லூரிகள் மூலம் பாதுகாப்பாக அழைத்து சென்று கலந்து கொண்டு வரப்படுகிறது. இவ்விதம் பேருந்துகள் வாங்க நிதியளித்த ஏல விவசாயிகள் சங்கத்திற்கும் அதன் தலைவர் **உயர்திரு.S.V.சுப்ரமணியன்** அவர்களுக்கும் **செயலர்**

**திரு.R.புருஷோத்தமன், உபதலைவர் திரு.S.இராமநாதன்** அவர்களுக்கும், மற்றும் **ஆட்சிக்குழு உறுப்பினர்கள்** அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**40. கார்டோ - காம்ப் (Cardo – comp) :**

மாணவ, மாணவியர்களின் தனித்திறமையை வளர்க்கும் பொருட்டு. நம் கல்லூரியின் முன்னாள் தலைவர் மரியாதைக்குரிய R.பாலுஅழகணன் அவர்களால் Cardo-comp ஏற்படுத்தப்பட்டு, இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாணவர்களை Cardamom House, Tea House, Coffee House மற்றும் Silk Cotton House என்று நான்கு குழுக்களாகப் பிரித்து அவர்கள் திறமைகளை வெளி கொணரும் பல வகையில் 20 வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. 20.03.2023 முதல் 21.03.2023 வரை ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்பட்டன. இதில் **420** மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்.லெ.அலமேலு அவர்கள், ஒருங்கிணைப்பாளராகவும், நூலகர் முனைவர்.ஜி.மங்கை அவர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர் திரு.கே.சிவா அவர்கள் இருவரும் துணை ஒருங்கிணைப்பாளர்கவும் செயல்பட்டார்கள். நான்கு குழுக்களின் தலைவர்களாக பேராசிரியர்கள் முனைவர்.அ.சுஜாதா, முனைவர்.வீ.ஹேமலதா, முனைவர்.கே.கிஷோர்குமார், முனைவர்.ஏ.ஆர்.மணிகண்டன் ஆகியோர்கள் செயல்பட்டனர். அனைத்து போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

**41. போதைப் பொருள் பயன்பாடு எதிர்ப்பு (Anti Drug Abuse)**

05.08.2022 அன்று போடி, அரசு மருத்துவனை தலைமை மருத்துவர் Dr.ரவீந்திரநாத் அவர்கள் மாணவர்களுக்கு போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வு சொற்பொழிவு ஆற்றினார்.போடி நகர காவல்துறை துணை கண்காணிப்பாளர் (DSP) திரு.சுரேஷ் அவர்கள் போதை பொருள் பற்றிய பாதிப்புகளை பற்றி மாணவர்களிடையே எடுத்துரைத்தார்.தேசிய மாணவர் படை மாணவர்கள் "Say Yes to Life No to Drugs" என்ற உறுதி மொழியை 05.08.2022 அன்று எடுத்தனர்.11.08.2022 அன்று போதை பொருள் விழிப்புணர்வுக்காக மனிதச்சங்கிலி நிகழ்ச்சி நடைபெற்றது.

**42. பணிஓய்வு பெற்றோர் மற்றும் பணிஓய்வு பெற இருப்போர் :**

நமது கல்லூரியின் கணிப்பொறி அறிவியல் துறைத்தலைவர் முனைவர்.கே.மாடசாமி மற்றும் கல்லூரியின் அலுவலக கண்காணிப்பாளர் திரு.எம்.சுந்தராஜ் ஆகியோர் 31.05.2023லிருந்து ஓய்வு பெற உள்ளனர்.

## நன்றியுரை:

**உலையில்லா வீட்டின் ஏழைச்சிறுவரும்**

**கலை பயில வாய்ப்பு தந்த**

எங்கள் தாய்ச் சங்கமாம் ஏல விவசாய சங்கத்தையும் கலைக்காக கல்லூரியும் தொடங்கி, அதன் உயர்வுக்காக ஓயாமல் உழைத்து வரும் போடிநாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி தலைவர், துணைத்தலைவர், செயலர் மற்றும் தாளாளர், ஆட்சிக்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைப் புரிந்திருக்கும் மதுரை காமராசர் பல்கலைக்கழக புல முதல்வர் முனைவர்.P.கண்ணதாசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் கல்வி, கலை மற்றும் விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள், சுழற்கோப்பைகள் மற்றும் நிதி உதவிகள் வழங்கிய நமது கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அறக்கட்டளைகளை நிறுவியுள்ள அருளாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் நிதி உதவி வழங்கிய பல்கலைக் கழக மானியக் குழு (UGC) DST, New Delhi, CSIR, New Delhi DRDO New Delhi, TNSCST Chennai ஆகிய நிறுவனங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை

கொண்டு கல்லூரிக்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் உடனுக்குடன் நல்கி வரும் நமது பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர், கல்லூரி வளர்ச்சிக்குழுகத் தலைவர் மற்றும் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கின்ற சென்னை கல்லூரிக் கல்வி இயக்குனர் மற்றும் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குனர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரி சிறப்புடன் செயல்பட அயராது உழைத்து வரும் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், ஊடக அன்பர்களுக்கும் மற்றும் கல்லூரி நலன் பேணும் பெரியோர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றி! வணக்கம்**

**டாக்டர். எஸ். சிவக்குமார், Ph.D.,**
**முதல்வர்**
**போடிநாயக்கனூர்**